www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

1—15 ஆகஸ்ட் '9

3 _ 18

விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## மரண வாயிலில் தேர்தல் முறை

படிப்பகம்



# போலீசின் ரௌடித்தனமும் புரட்சியாளர்களின் உறுதியும்

கடந்த ஜூன் 3ம் நாளன்று இரவு 8 மணியளவில் கடலூர் மஞ்சக் குப்பம் அண்ணா மார்க்கெட் அருகே எமது தோழமை ஏடான புதிய ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தி எழுச்சிமிகு பிரச்சாரத்தின் மூலம் விற்பனையை மேற்கொண்டோம். அப்போது அந்த வழியாக வந்த போலீஸ் வேன் ஒன்றிலிருந்து இறங்கிய டி.எஸ்.பி. சுந்தர்ராஜன் தலைமையிலான போலீஸ் கும்பல் கூடியிருந்த மக்களை விரட்டிப் பீதியூட்டியது. அஞ்சாது நின்ற எங்களிடம் 'இங்க என்னடா கலாட்டா?' என்றான் டி.எஸ்.பி. 'நாங்கள் மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். எமது தோழமை ஏடான புதிய ஜனநாயகத்தை பிரச்சாரம் செய்து விற்பனை செய்கிறோம்' என்றோம்.

"ஓ, புதிய ஜனநாயகமா! நீங்கள்ளாம் தீவிரவாதிங்க, நக்சலைட்டுங்க! சரி, சரி. கலைஞ்சு போங்க" என்று விரட்டினான். நாங்களும் நிகழ்ச்சியை முடிக்கும் தருவாயில் இருந்ததால், நிகழ்ச்சியை முடித்துக் கொள்வுதாய் அறிவித்துவிட்டு வழக்கம் போலவே, "மக்கள் கலை இலக்கியக் கழகம் வாழ்க! தேர்தல் பாதையைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சி ஓங்குக!" என்று முழக்கமிட்டோம்.

வேனை நோக்கிச் சென்று கொண்டிருந்த டி.எஸ்.பி. திடீரென வெறிபிடித்தவன் போல ஓடி வந்து, 'நான் சொல்லிக்கிட்டே இருக்கேன். கோஷயாடா போடறீங்க? ஏறுங்கடா வேன்ல!' என்றபடி பொதுமக்கள் மத்தியிலேயே எங்களை அடித்து வேனுக்குள் தள்ளினான்.

"நாங்கள் ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள். பிரச்சாரம் செய்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. காக்கிச் சட்டை போட்டிருப்பதால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்காதீர்கள்" என்று கூறியபோது டி.எஸ்.பி. பூட்சு காலாலேயே எங்களை எட்டி உதைத்தான்.

பின்னர் எங்களை வேனில் ஏற்றி போலீஸ் நிலையத்திற்குள் இழுத்து வந்ததும், தனது எடுபிடிகள் சூழ, வெறிபிடித்தவன் போல டி.எஸ்.பி. எங்களை லட்டிக் கோலால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கினான். பின்னர், 'போலீசையா எதிர்த்து பேசற? இப்ப பரிதாபமா கத்தப்போற பாரு!" என்றபடி எங்களின் உடைகளைக் களைந்து உள்ளாடையுடன் நிற்க வைத்து கைகளை தலைக்கு மேலே உயர்த்தி கட்டிவிட்டு, கைகளுக்கும் கழுத்துக்குமிடையே லட்டிக் கோலைச் செருகி சித்திரவதையைத் தொடங்கினர்.

இதற்கெல்லாம் இம்மியளவும் அஞ்சாமல், 'உன்னாலே வேற என்ன செய்ய முடியும்? நாங்க எல்லாத்துக்கும் தயாராத்தான் இருக்கோம்! உன்னோட அடி— உதை — மிரட்டலுக்கெல்லாம் பணிந்து விடுவோம் என்று கனவு காணாதே!' என்று உரத்து முழங்கினோம். அரண்டு போன டி.எஸ்.பி. என்ன செய்வதென்று புரியாமல் குறுக்கும் நெடுக்குமாக வேகமாக நடந்து விட்டு விருட்டென வெளியேறினான்.

இதற்கிடையேதகவல் அறிந்து கடலூர் ம.க.இ.க. கிளை செயலாளர் தோழர் இந்திரசித்து போலீஸ் நிலையம் வந்துவெளியே நின்றிருந்த டி.எஸ்.பி.யிடம் விசாரிக்கவும், அவரையும் நெட்டித்தள்ளி காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினான். போலீசுடன் ஒத்துழைத்து ஆடைகளைக் களையஅவர் மறுத்ததால் அவரது ஆடைகளை வலுக்கட்டாயமாகக் களைந்து உள்ளாடையுடன் எங்களுடன் சேர்த்து அவரையும் லாக்கப்பிற்குள் போலீசு கும்பல் தள்ளியது. 'புதிய ஜனநாயகப் புரட்சி ஓங்குக! போலீஸ் அராஜகம் ஒழிக! என்று மூவரும் சேர்ந்து முழங்கினோம். பின்னர், 'சொல்லவே கூசுதம்மா சுதந்திரமாம் சுதந்திரம்' என்றபாடலை தோழர் இந்திரசித்து பாட போலீஸ் நிலையமே அதிரும் வண்ணம் வசந்தத்தின் இடிமுழக்கமென நாங்கள் எதிரொலித்தோம்.

அடுத்த நாள் காலையில், சில நாட்களுக்கு முன் நாங்கள் படித்திருந்த கம்யூனிஸ்ட் அறிக்கை என்ற மார்க்சும்-ஏங்கெல்சும் எழுதிய வரலாற்றுப் புகழ் பெற்ற நூலை கூட்டாகச் சேர்ந்து விவாதித்தோம். பின்னர் மதியம் சுமார் 2 மணியளவில் இரு துப்பாக்கி ஏந்திய போலீசார் காவலுடன் வழக்கு மன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டோம். வழக்கு மன்ற வாசலில் மக இக தோழர்கள் கூடி நின்று விண்ணதிரும் முழக்கங்களுடன் எங்களை வரவேற்றனர்.

பின்னர் நாங்கள் மாஜிஸ்திரேட் முன் விசாரணைக்கு நிறுத்தப்பட்டதும், "இவர்கள் நக்சலைட் தீவிரவாதிகள். பொது மக்கள் கூடுமிடத்தில் போக்குவரத்துக்குஇடையூறு செய்துபுதிய ஜனநாயகம் என்ற பத்திரிக்கையை விற்பனை செய்தனர். பிரதமர் ராஜீவ் காந்தியை அருவெறுக்கத்தக்க முறையில் விதேசி ராஜா என்று பேசியும் பாடியும் பிரச்சாரம் செய்தனர்" என்று குற்றச்சாட்டுகளை உரக்கப் படித்துவிட்டு, "இவர்கள் தோற்றத்தில் (?) நக்சலைட்டுகள் போலவே உள்ளனர்" என்றும் கூறி ஒரு வார காலத்திற்கு சிறையிலடைக்க உத்திரவிட்டார். **அதன்படி கடலூர் கிளைச் சிறை**யில் நாங்கள் அடைக்கப்பட்டோம். இதற்கிடையே ஜாமீன் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அன்று மாலையே ஜாமீனில் விடுவிக்கப்பட்டோம்.

பிரச்சாரங்களைத் தடுப்பது, அதன் மூலம் மக்களிடம் உண்மைகள் சென்று விடாமல் தடுப்பது, மக்களைப் பீதியூட்டுவது, தோழர்களை அடித்து உதைப்பது முதலானவற்றின் மூலம் புரட்சிகர இயக்கங்களைப் பணிய வைத்து விடலாம் என்று போலீசு நாய்கள் கனவு காண்கின்றன. ஆனால் ஒரு லட்சிய உணர்வோடு மக்களுக்குப் பணியாற்றுகின்ற புரட்சியாளர்களை இத்தகைய அடக்குமுறைகள் மேலும் மேலும் புடம் போட்டு உறுதிப் படுத்துகின்றன என்பதே வரலாற்று உண்மை.

தோழமையுடன்,

இந்திரசித்து, சக்கரை,
தினதயாளன்,
மக்கள் கலைஇலக்கியக் கழகம்,
கடலூர் கிளை.

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

18

1-15 ஆகஸ்ட்' 88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

குஜராத்:

# பற்றி எரியும் 'கலகத்தீ'!

குஜராத் போலீசாரின் "கலகத்தீ" மூண்டு மாநிலம் முழுவதும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் மத்திய ராணுவமும் துணை ராணுவமும் போலீசாரை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஏவிவிடப் பட்டுள்ளனர். "கலகத்தீ" மூண்ட முதல் நாளில் அகமதாபாத், காந்தி நகர், பரோடா, மற்றும் ராஜ்கோட் ஆகிய நகரங்களில் பல போலீசு நிலையங்களைப் பூட்டிக் கொண்டு போலீசாரும் கீழ்நிலை அதிகாரிகளும் போய் விட்டார்கள். "கலகத் தலைமை"யைக் கைது செய்ய மத்திய ரிசர்வ் போலீஸ் படை காவலர் குடியிருப்புகளுக்குப் போனபோது போலீசார் தமது குடும்பத்துடன் சூழ்ந்து கொண்டு திருப்பித் தாக்கினர். பலமுறை மத்தியப் படை துப்பாக்கி சூடு நடத்தியது.

"நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது. அசம்பாவிதம் எதுவுமில்லை. அமைதி நிலவுகிறது. வேலை நிறுத்தம் பரவவில்லை" என்று மாநில முதல்வர் புளுகுகிறார். உடனடியாக "வேலைக்குத் திரும்பாவிடில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். குடியிருப்புகளில் இருந்து விரட்டப்படுவர்" என்றும் அவர் மிரட்டுகிறார். ஆனாலும் "கலகத் தீ" குஜராத்தின் பிற மாவட்டங்களுக்கும் பரவுகிறது. போலீசாரின் குடும்பங்கள் சங்கம் அமைத்துப் போராடுகின்றனர்.

எந்தச் சமயத்திலும் பற்றி எரியும் வகையில் பல மாதங்களாகப் போலீசாரிடையே புகைந்து கொண்டிருந்ததுதான் இந்தக் "கலகத் தீ"! அதை பெருந்தீயாக இப்போது மூட்டிவிட்டது மத்திய—மாநில அரசுகள்தாம்! "குஜராத் போலீசாரிடையே ஒழுங்கீனம் பெருகிவிட்டது. இனியும் சகித்துக் கொள்ள முடியாது. ஒழுங்கு—கட்டுப்பாட்டை நிலைநாட்டுவோம்" என்று ஜூலை 19ந் தேதி சந்தித்த மத்திய உள்துறை மந்திரி பூடாசிங்கும் குஜராத் முதல்வர் அமர்சிங் சௌதுரியும் பாசிச ராஜீவின் ஒப்புதலோடு முடிவு செய்தனர். உடனே மத்திய ராணுவமும் துணை ராணுவ்மும் குஜராத்தில் குவிக்கப் பட்டன. ஏழு போலீசுமற்றும்போலீசு அதிகாரிகளின் சங்கங்களை ரத்துசெய்ததுடன் அதன் த லைவர்கள் 55 பேரை வேலையிலிருந்து நீக்கினர். முன்னெச்சரிக்கையாக சட்ட ஒழுங்கு நிர்வாகத்தையும், 36 ஆயுதக் கிடங்குகளையும் மத்திய துணை ராணுவம் கைப்பற்றியது. நகரங்களில் ராணுவம் ரோந்து சுற்றியது. ஆவேசமடைந்த போலீசார்—கீழ்நிலை அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்—"கலகத் தீ" மூண்டது!

"குடியரசுத் தலைவர் வெங்கடராமனைத் தாக்கிப் பேசுகின்றனர். பிரதமர் ராஜீவ் உப்பு சத்தியாகிரக—தண்டியாத்திரை போனபோது நையாண்டி செய்து ஏசினர். குடியரசு மற்றும் சுதந்திர தினங்களில் போட்டியாக சங்கக் கொடிகளை ஏற்றினர். எல்லாவற்றையும்விட முக்கியமாக பஞ்சாபில் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்குக் குஜராத் போலீசார் அனுப்பப் படுவதை தடுக்க முயன்றனர், தடுத்தனர், போக மறுத்தனர்"—இவை குஜராத் போலீசாரிடையே கண்ட ஒழுங்கீனங்களில் சிலவாகும் என்று குற்றஞ் சாட்டுகிறார் முதல்வர்.

'கலகத்தை ஒடுக்குங்கள், சங்கங்களை அனுமதிக்காதீர்கள், கடுமையாகத் தண்டியுங்கள்!' என்று குதிக்கிறார்கள் தேசபக்த வேசம் போடுபவர்கள். உண்மையான தேசபக்தர்களும் ஜனநாயக வாதிகளும் அப்படிக் கருத முடியாது. அரசுத் தலைவர், பிரதமரின் நடவடிக்கைகளை விமர்சிப்பதும் சங்கக் கொடிகளை ஏற்றுவதும் மற்றபிற மக்களைப் போலவே போலீசாரின் உரிமை. பஞ்சாப் மக்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதக் குற்றங்கள் செய்யும் கூலிப்படையாக அங்கு போக மறுப்பது முற்றிலும் நியாயமானதே. தமிழர்களுக்கு எதிராக மராத்தி, கூர்க்காபடையினரையும் சீக்கியர்களுக்கு எதிராக தமிழ், குஜராத்திப் படையினரையும் ஏவிப் படுகொலைகள் செய்யும் பாசிச கும்பலின் சூழ்ச்சியை எதிர்ப்பது சரியானதே!

குஜராத் போலீசாரின் இந்த நியாயமான உரிமைகள்—நிலைப்பாடுகளைக் காரணங்காட்டி ஒடுக்கும் பாசிச கும்பல் அதே சமயம் குஜராத் போலீசில் உள்ள கிரிமினல் குற்றவாளிகளை ஊட்டி வளர்க்கிறது.பம்பாய்க்கு அடுத்து கடத்தல்—கொலைகளை தொழிலாகக் கொண்டுள்ள மஃபியா குண்டர்கள் நிறைந்தது குஜராத்—அகமதாபாத். உத்திரப் பிரதேசத்தையும் பீகாரையும் அடுத்து சாதி, மத வெறி கலகக்காரர்களைக்கொண்டதுகுஜராத். இந்த சமூக விரோத, மக்கள் விரோத கும்பல்களுடன் கூடித் தாமே பல கிரிமினல் குற்றங்களையும் கலகங்களையும் குஜராத் போலீசார் செய்ததுண்டு. பத்திரிக்கைகளுக்கு எதிராக ஆயுதந்தாங்கிய போலீசார் சூறையாடவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு அப்பாவி மக்களை ஒடுக்கவும் இன்னும் பல ஜனநாயகவிரோத, மக்கள் விரோத பாசிச நடவடிக்கைகளுக்கு கருவியாக குஜராத் போலீசார் இருந்ததுண்டு. இவற்றுக்கெல்லாம் எதிராக ஒழுங்கு—கட்டுப்பாடு நடவடிக்கை எடுக்க முன்வராத பாசிச ஆளும் கும்பல் போலீசாரின் நியாயமான—உரிமைகள், சரியான முடிவுகளுக்கு எதிராக ராணுவத்தையும் துணை ராணுவத்தையும் ஏவியுள்ளது.

பரந்துபட்ட மக்களிடமிருந்து மட்டுமல்ல, அரசு எந்திரத்தின்உறுப்பினரிடையேயும் ஆதரவிழந்து த-ரிமைப்பட்டு வருகிறது பாசிச ஆளும் கும்பல் என்பதையே குஜராத்தில் மூண்டுள்ள கலகத் தீயின் வெளிச்சம் காட்டுகிறது!

படிப்பகம்

www.padippakam.com

## • ஆள் பலம் • பண பலம் • ஆயுத பலம்

# தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்று சக்திகள்

"ஒரு குறிப்பிட்ட வேட்பாளர் இவ்வளவு வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார் என்று வழக்கமாகச் சொல்லி வந்தோம். இப்போது ஒரு வேட்பாளர் இவ்வளவு துப்பாக்கிகள் கொண்டு வென்றார் என்று நாங்கள் சொல்லக் கூடிய காலம் வருகிறது" என்று நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகம்—தேர்தல்முறை ஆகியவற்றின் நிலைமை பற்றி இந்தியத் தேர்தல் கமிஷன் அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

இதுவரை பணபலமும் ஆள் பலமும் அதிகமாகப் பெற்றிருந்த கட்சியும் வேட்பாளர்களும்வெற்றி பெற்றார்கள். இப்போது இவை மட்டும் போதாது. ஆயுத பலமும் வேண்டும். தேர்தலில் எதிரியை வீழ்த்துவதற்கான திரிசூலத்தின் மும்முனைகள் பணபலம், ஆள் பலம் மற்றும் ஆயுத பலம் ஆகியவைதான் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளுமே முடிவு செய்துவிட்டன. அரசியல் கொள்கைகளையோ, மக்கள் செல்வாக்கையோ நம்பிப் பயனில்லை என்பதை எப்போதோ அவர்கள் கண்டு கொண்டு விட்டார்கள்.

சாதி ஆதிக்கம், பண ஆதிக்கம் ஆகியவற்றைக் கொண்டு நாடு முழுவதும் காங்கிரசு ஏகபோகமாகத் தேர்தல் வெற்றி பெற்று ஆட்சி நடத்தியவரை எல்லாம் அமைதியாக, ஆரோக்கியமாக நடப்பதுபோலத் தோற்றமளித்தது. நகரங்களில் பெருமுதலாளிகளின் பிரதிநிதிகளை நிறுத்தி பண ஆதிக்கம் கொண்டு தேர்தல் வெற்றிகளைக் காங்கிரசு சாதித்துக் கொண்டது. கிராமங்களில் முன்னாள் அரசர்கள், மிட்டா மிராசுகளை நிறுத்தியது. சாதி ஆதிக்கம், பண்ணை அடிமைகளின் 'ராஜ விசுவாசம்' போன்றவற்றைக் கொண்டு தேர்தல் வெற்றிகளைக் காங்கிரசு சாதித்துக் கொண்டது. 1967 பொதுத் தேர்தல்களில் காங்கிரசின் ஏகபோக ஆட்சி ஆட்டங்கண்டது. 9 மாநிலங்களில் அது ஆட்சி அதிகாரம் இழந்தது;எதிர்க்கட்சிகளோ, கூட்டணிகளோ வென்றன. அதே சமயம் ஆயுத பலமும் தேர்தல் களத்தில் குதித்தது. இப்போது ஆயுதபலம் தேர்தல் வெற்றிக்குத் தேவையான மூன்றாவது முக்கிய சக்தியாகிவிட்டது.

### தேர்தல் மோசடிகள்

எட்டுவிதமான தேர்தல் முறைகேடுகள்—ஊழல்களை இந்தியத் தேர்தல் சட்டம் பட்டியலிட்டுச் சொல்லுகிறது. ஆனால் தேர்தல் சட்டத்தில் சொல்லப்படாத புதிய புதிய தேர்தல் தில்லுமுல்லு—மோசடி வழிகளை ஓட்டுப் பொறுக்கிகள் கண்டுபிடித்து ஒரு தொழில் முறையாக வளர்த்துள்ளனர்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பதிலிருந்தே தேர்தல்தில்லுமுல்லு-மோசடிகள் தொடங்கி விடுகின்றன. தேர்தலில் கள்ள ஓட்டுப் போடும் நோக்கத்தோடு வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் போதே வயது வராத சிறுவர்—சிறுமிகள், இறந்து போனவர்கள், வெளியூரில் வாழ்வோர் பெயர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வது; வாக்களிக்கும் தகுதி உள்ளவர்களின் பெயர்களை நீக்கி விடுவது; இரண்டு மூன்று இடங்களில் ஒரு வாக்காளரின் பெயரையே பதிவு செய்வது—ஆகியவை இத்தகைய மோசடிகள்.

தேர்தலுக்கான தொகுதிகளைப் பிரிப்பதிலும்தில்லுமுல்லு—மோசடிகள் நடக்கின்றன. ஆளும் கட்சி வெற்றி பெறும் வகையில் அதற்கு மட்டுமே செல்வாக்குள்ள பகுதிகளைத் தகுந்த முறையில் வேறு பகுதிகளுடன் சேர்த்து தொகுதிகளை வரையறுப்பதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை அது ஏற்படுத்திக் கொள்கிறது. ஜனநாயகத்தின் தொட்டில் என்று "சோ" போன்றவர்கள் பீற்றிக் கொள்ளும்அமெரிக்காவின் துணை அதிபராக இருந்த எல்பிரிட்ஜ் கெர்ரி 1812லேயே இந்த முறையைக் கண்டுபிடித்துப் பின்பற்றினார். எனவே இந்த தேர்தல் தில்லுமுல்லு—மோசடிக்கு கெர்ரி மேன்டரிங் (Gerrymandering) என்று அவரது பெயரேவந்தது.

இந்தியாவில் ஆளும் கட்சிகள் நாடாளுமன்றத் தொகுதிகள் மட்டுமல்ல நகராட்சி, வட்டங்களையே கூட "கெர்ரி மாண்டரிங்" முறையிலேயே வரையறுக்கின்றனர்.

ஆள் மாறாட்டம்செய்து கள்ள ஓட்டுப் போடுவது இன்னொரு தேர்தல் தில்லுமுல்லு-மோசடி. மிகப் பெரும் அளவில் கூலிக்கு ஆட்களை அமர்த்திக்கொண்டு, எதிர்கட்சி ஏஜெண்டுகளை மிரட்டியோ-கடத்தியோ, தேர்தல் அதிகாரிகளை விலைக்கு வாங்கியோ மிரட்டியோ கள்ள ஓட்டுப் போடுகிறார்கள். இதைத் தடுப்பதற்காக பயன்படுத்தும் 'அழியா' மையை அழிக்கவும் ஓட்டுப் பொறுக்கிகளுக்குத் தெரியும்.

ஆயுதந்தாங்கிய குண்டர்களை வைத்து ஓட்டுச்சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு தேர்தல் தில்லுமுல்லு, மோசடி செய்வது இப்போது வளர்ந்து வரும் முறையாகிவிட்டது. குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு இல்லாத பகுதிகளுக்கு ஆயுதந்தாங்கிய குண்டர்களை ஏவி ஓட்டுச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்கிறார்கள். வாக்காளர்களை அடித்து விரட்டி வாக்குப் பதிவு நடக்காமல் தடுக்கின்றனர். அதுவும் போதாது என்றால் எதிரியின் ஏஜெண்டை அடித்து விரட்டி விட்டு, தேர்தல் அதிகாரியை மிரட்டிப் பணிய வைத்துவிட்டு வாக்குச் சீட்டுகளைப் பறித்து தமக்கு வேண்டிய வாக்காளர்களின் சின்னத்தில் முத்திரைகுத்தி பெட்டிக்குள் திணித்து விடுகின்றனர்.

காஷ்மீரின் உதாம்பூர் தொகுதி—வாக்குச் சாவடியை கைப்பற்றிக் கொண்டு காங்கிரசு குண்டர்கள்.





படிப்பகம்

www.padippakam.com



முத்திரையை உடைக்காமலேயே கள்ள வோட்டுக்களை பெட்டிக்குள் சொருகிவிடவும் வசதியாக பெட்டிகளைத் தயாரிக்கின்றனர் என்று புகார் கூறுகிறார் வி.பி.சிங்

கள்ள வோட்டுக்களை பெட்டிக்குள் சொருகிவிடவும் வசதியாக பெட்டிகளைத் தயாரிக்கின்றனர்.

வாக்குகள் எண்ணுமிடத்துக்குள் ஆயுதந்தாங்கிய குண்டர்களை ஏவியோ, அதிகாரிகளை விலைக்கு வாங்கியோ வாக்கு எண்ணிக்கையிலேயே தில்லுமுல்லு மோசடிகள் செய்கிறார்கள். எதிரிக்குரிய வாக்குகளைச் செல்லாதென்று ஒதுக்கியும், செல்லாத வாக்குகளைத் தனக்குரியதாக மாற்றியும் இந்த மோசடிகள் நடக்கின்றன. எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்களின் ஏஜெண்டுகளை அடித்து விரட்டிவிடுகின்றனர். வாக்குகள் எண்ணுமிடத்துக்குள் வேட்பாளர்களை அனுமதிக்காது விரட்டுகின்றனர்.

தேர்தல் சட்டத்தில் இடம் பெறாத இந்தத் தில்லுமுல்லு மோசடிகளுக்கு இதுவரை எந்தத் பரிகாரமும் கிடையாது. சில சமயங்களில் புகாருக்குரிய வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவுகள் நடக்கின்றன. ஏராளமான போலீசார் குவிக்கப்படுகின்றனர். அவர்களும் தேர்தல் தில்லுமுல்லு மோசடிக்கு உடந்தையாய் இருக்கின்றனர். 90 சதவிகிதத்திற்கு மேல் வாக்குப் பதிவான சாவடிகளின் வாக்குகளை கணக்கில் எடுக்காமல் ஒதுக்கி வைக்கின்றனர். அதாவது அங்கு மோசடிகள் நடந்திருக்கும் என்கிற அடிப்படையில். இதுதான் ஜனநாயகத்தின் யோக்கியதை!

## தேர்தல் அதிசயங்கள்

ஒவ்வொரு தேர்தலின்போதும் தேர்தல் அதிசயங்கள் என்று சில சுவையான செய்திகளைப் பத்திரிகைகள் எழுதுவதுண்டு அவை அப்போது எழுதாமல் போன அதிசயங்களும் உண்டு. 1983 ஜம்மு காஷ்மீர் தேர்தலின் போதும் கத்தை கத்தையாக வாக்குச் சீட்டுகள் தேர்தலுக்கு முன்பே தேர்தல் கமிஷன் முன்பு தரப்பட்டன. அவை ஆளுங்கட்சி கள்ள ஓட்டுப் போடுவதற்காகக் கூடுதலாக அச்சிடப்பட்டவை. இதுமாதிரியான பல புகார்கள் ஆதாரத்துடன் வந்தும் அனைத்தையும் தேர்தல் கமிஷன் நிராகரித்து விட்டது.

1977 தேர்தலில் வாக்கு எண்ணிக்கையின் போது ஆயுதந்தாங்கிய குண்டர்கள் புகுந்து அட்டூழியம் செய்துவிட்டதாக பிரோஜ்பூர் தொகுதி வழக்கு உச்ச நீதிமன்றம்போனது. இன்னமும் வழக்கில் தீர்ப்பு எதுவும் வரவில்லை. அடுத்த தேர்தலும் வந்து முடிந்துவிட்டது.

இந்த ஆண்டு ஜனவரியில் திரிபுரா மாநிலத் தேர்தலில் ''மார்க்சிஸ்டு'' கட்சி வேட்பாளர் 2000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவித்து வெற்றி ஊர்வலம்கூட நடத்திவிட்டுத் தூங்கப் போய் விட்டார். பிறகு அவரை எழுப்பி 300 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரசு வேட்பாளரிடம் தோற்றுப் போனார் என்று அறிவித்தார்கள்.

1983இல் நடந்த ஜம்மு காஷ்மீர் மாநிலத் தேர்தலில் தோடா தொகுதியில் மோசடிகள் நடந்ததாக வாக்கு எண்ணிக்கையை நிறுத்தி வைக்கும்படி தேர்தல் கமிஷன் தந்தி அடித்தது. பசுக் கட்சி வேட்பாளரிடம் விலை போன தேர்தல் அதிகாரி வாக்குகளை எண்ணி அவர் வெற்றி பெற்றதாக அறிவித்தார். தந்தி உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்று அவர் சொன்னது பொய் யென்று நிரூபிக்கப்பட்டு முடிவு அறிவிப்பை தள்ளுபடி செய்து 106 சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடந்தது. பசுக் கட்சிக்காரர் உயர்நீதி மன்றத்துக்குப் போய் கமிஷன் முடிவை நிறுத்தி வைத்தார். கமிஷன் உச்சநீதி மன்றத்துக்குப்போய் உயர்நீதி மன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும்படி தீர்ப்பு வாங்கியது. இன்னும்வழக்குமுடிவுவரவில்லை. அடுத்த தேர்தலும் வந்து முடிந்து விட்டது.

1980 பொதுத் தேர்தலில் காங்கிரசு சார்பாக நின்று உ.பி. கோர்வால் தொகுதியில் பகுகுணா வென்றார். காங்கிரசிலிருந்தும் எம் பி பதவியிலிருந்தும் விலகி 1981இல் மீண்டும் அதை எதிர்த்துப் போட்டியிட்டார். அப்போது உ.பி. முதல்வராக இருந்த, இன்றைய ''பரிசுத்தம்'' வி.பி. சிங், இந்திரா உட்பட 60 மந்திரிகள் கோர்வால் தொகுதியில் முகாமிட்டனர். ஏராளமான மத்திய மாநில போலீசைக் குவித்து தேர்தல் தில்லுமுல்லு மோசடிகள் செய்து காங்கிரசு வேட்பாளர் நேகி வென்றதாக அறிவிக்கப்பட்டது. பகுகுணாவின் புகாரை ஏற்று தேர்தல் முடிவை ரத்து செய்து மறுதேர்தல் நடத்திய து தேர்தல் கமிஷன். பகுகுணா வெற்றி பெற்றார்.

1987 அரியானா சட்டமன்ற தேர்தலில் தேவிலால் கட்சி வேட்பாளரும் முன்னாள் முதல்வரும் இன்னாள் துணை முதல்வரும் ஆன பனாரசி தாஸ் குப்தா எண்ணிக்கையில் 8000 வாக்குகள் குறைவாகப் பெற்று பின் தங்கியிருந்தார். இன்னும் 4000 வாக்குகளே எண்ண வேண்டி இருந்தது. பனாரசி தாஸ் குப்தாவின் தோல்வி நிச்சயம் என்கிற நிலையில் திடீரென்று ஆயுதந்தாங்கிய குண்டர்கள் வாக்குகள் எண்ணுமிடத்துக்குள் நுழைந்து எல்லோரையும் அடித்து விரட்டினர். வாக்குச் சீட்டுக்களைக் கிழித்து வீசினர். பிறகு பனாரசி தாஸ் குப்தா துணை முதல்வரானார். மறுதேர்தலில்55000வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்!

கடந்த ஜூன் மாதம் நடந்த இடைத் தேர்தல்களில் அரியானா ஃபரிதாபாத் நாடாளுமன்றத் தொகுதியிலும்தோரு சட்டமன்றத் தொகுதியிலும் தேவிலால் கட்சியின் ரவுடித்தனம்—மோசடி காரணமாக சில வாக்குச் சாவடிகளில் ஏராளமான போலீசு குவிக்கப்பட்டு மறுதேர்தல் நடந்தது தேர்தல் முடிவில் 1.56லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பரிதாபாத்திலும், 37,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோரு தொகுதியிலும் தேவிலாலின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஒரு வாரத்திற்குப் பிறகு பரிதாபாத் தொகுதியில் 1.56 லட்சம் அல்ல 1.1 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் தேவிலால் கட்சிக்காரர் வென்றார் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. தோரு தொகுதியில்37000 அல்ல, 55000 வாக்குகள் வித்தியாசத்தில் தமது கட்சி வென்றது என்று தேவிலால் மகன் அறிவித்தார். விவகாரம் என்ன



படிப்பகம்

www.padippakam.com

-வென்றால் 90 சதவிகிதத்துக்கு மேல் பதிவான சாவடிகளின் வாக்குகளை ஒதுக்கி வைத்து விட்டு தேர்தல் கமிஷன் பரிதாபாத் தொகுதி முடிவு சொல்கிறது. 90 சதவிகிதத்துக்கு மேல் பதிவான சாவடிகளின் வாக்குகளையும் சேர்த்துக் கொண்டு தேவிலால் மகன் தோரு தொகுதி முடிவு சொல்கிறார். ஜனநாயக முறை என்பதெல்லாம் கிடையாது. தோராயமாக 90 சதவிகிதம் என்கிற எண்ணிக்கையில் குறிப்பிட்ட பகுதி மக்கள் அனைவரின் ''உரிமைகளையே'' பறித்துக் கொண்டு ஜனநாயகம் நடக்கிறது. ஓட்டுப் பொறுக்கிகளின் ரவுடித்தனம் மோசடிக்கு தீர்வு மக்களின் ''உரிமைகளை''ப் பறிப்பதுதான் அவர்கள் கண்ட வழி!



வாக்குச் சாவடியில் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டு பீதியூட்டும் போலீசு கும்பல். ஜனநாயக பூர்வமான, சுதந்திரமான, அமைதியான தேர்தலின் யோக்கியதை.

### தேர்தல் வன்முறைகள்

கடந்த பத்தாண்டுகளில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது, வாக்குப்பெட்டிகளைப் பறித்துக் கொள்வது, வாக்காளர்களையும் தேர்தல் ஏஜெண்டுகளையும் அடித்து விரட்டுவது, வாக்கு எண்ணும் மையங்களில் ஆயுதந்தாங்கிய குண்டர்கள் புகுந்து தாக்குவது போன்ற தேர்தல் வன்முறைகள் நடக்காத நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தல்களே கிடையாது.

உத்திரப்பிரதேசம், பீகார், அரியானா, ஆந்திரப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், கர்நாடகா மற்றும் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் தேர்தல் வன்முறை சர்வ சாதாரண விவகாரமாகிவிட்டது. இப்போது இந்த நோய் மற்ற மாநிலங்களுக்கும் பரவும் கட்டத்தை எட்டிவிட்டது என்று தேர்தல் கமிஷன் அதிகாரிகளே ஒப்புக் கொள்கிறார்கள். ''பீகார்போன்ற சில மாநிலங்களில் வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவது ஒரு தீராத நீண்டகாலப் பிரச்சினையாகிவிட்டது. சில பகுதிகளில் அது மிகப் பெரிய அளவு பிரச்சினையாகிவிட்டது'' என்று தேர்தல் கமிஷன் அறிக்கை கூறுகிறது.

''பீகார் அரசியல் துப்பாக்கி முனையிலேதான் தீர்மானிக்கப்படுகிறது. ஆயுதந்தாங்கிய குண்டர்களின் துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் வாக்குச் சீட்டுகளே வந்து விழுகின்றன'' என்று ஒரு முதலாளித்துவப் பத்திரிக்கை எழுதுகிறது. இந்த நிலை வேகமாக மற்ற மாநிலங்களுக்கும் பரவுகிறது. இப்படியே போனால் அடுத்த பொதுத் தேர்தல் முடிவுகள் ஆயுத பலத்தைக் கொண்டு மட்டுமே தீர்மானிக்க முடியும் என்று அது அஞ்சுகிறது! ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் இரண்டு தரப்புமே இதற்குத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

தேர்தல் தில்லுமுல்லு மோசடிகள், தேர்தல் வன்முறைகள் புதிய விவகாரங்கள் அல்ல. அவை ஏற்கனவே வளர்ந்து வருபவைதான். ஆனால் இப்போது அபாய அளவை எட்டிவிட்டதாக ஓட்டுக் கட்சிகளும், அதிகாரிகளும், பத்திரிக்கைகளும் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்ளுகின்றன என்பது தான் உண்மை. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முக்கிய உறுப்பாக அவர்கள் கருதும் தேர்தல் ஏற்கனவே கொலைக்களத்துக்கு இழுத்து வரப்பட்டு அங்க அங்கமாக வெட்டிச் சிதைக்கப்படுகிறது. அதன் தலையையே சீவி உயிரைப் பறித்து விடுவதுதான் பாக்கி இருக்கிறது.

1971-72இல் 55 தேர்தல் வன்முறைகள் பற்றிய புகார்கள் வந்தன. ஏழு நாடாளுமன்ற தொகுதிகளில் மறு வாக்குப் பதிவு நடந்தது. ஆயுதந்தாங்கிய குண்டர்களும் 'கலகக்கார கும்பலும்' வாக்குப் பெட்டிகளைப் பறித்துக் கொண்டதுதான் அதற்குக் காரணம். 1977இல் 41 வன்முறைச் சம்பவங்கள் பற்றிய புகார்களின் பேரில் 10 தொகுதிகளில் மறு வாக்குப் பதிவும் 8 தொகுதிகளில் தேர்தல் தள்ளி வைப்பும் நடந்தது. ஆயுதந்தாங்கிய குண்டர்கள் வெடிகுண்டுகளை வீசி, துப்பாக்கிகளால் சுட்டு வாக்குப் பெட்டிகளைப் பிடுங்கிக் கொண்டு ஓடியதால் 10 தொகுதிகளில் மறு வாக்குப் பதிவு நடந்தது. அதே போன்ற வன்முறைகளால் தேர்தலே நடத்த முடியாமல் மூன்று தொகுதிகளில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

1980 பொதுத் தேர்தலில் மேலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தன. பீகாரில் மட்டும் 16 சட்டமன்றத் தொகுதிகளில் 187 வழக்குகளும், 6 நாடாளுமன்றத் தொகுதிகளில் 21 வழக்குகளும் ஏற்பட்டு மறுவாக்குப் பதிவு நடந்தது. மற்ற மாநிலங்களில் 14 நாடாளுமன்ற தொகுதிகளில் மறு வாக்குப் பதிவு நடந்தது. 1984 பொதுத் தேர்தலில் மொத்தம் 2418 தேர்தல் வன்முறை வழக்குகள் வந்தன. அவற்றில் 750 உத்திரப்பிரதேசத்திலும், 259 பீகாரிலும், 240 மேற்கு வங்கத்திலும் நடந்தன. இதேபோல 1983 ஆந்திரா, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர் மாநிலத் தேர்தல்களில் வன்முறைகள் பரவலாக நடத்தப்பட்டு தேர்தல் தில்லுமுல்லு மோசடிகள் நடந்தன.

முக்கியப் புள்ளிகள் போட்டியிடும் தொகுதிகள், கௌரவப்பிரச்சினையாக மாறிவிடும் இடைத் தேர்தல் கூடுதலான போலீஸ் குவிக்கப்பட்ட போதும் மிக அதிக பட்சமான வன்முறைச் சம்பவங்கள் நடக்கின்றன. 1977இல் ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு நடந்த பீகார்-சமஸ்திபூர் இடைத் தேர்தலில் இரண்டு ஜனதா மந்திரிகளே முன்னின்று வன்முறை வெறியாட்டம் போட்டனர். அதே போல 1978இல் கர்நாடகா சிக்மகளூர் இடைத் தேர்தலில் இந்திராவும், 1986 பீகார் பாங்கா தொகுதியில் ஜார்ஜ் பெர்னாண்டசும், 1982 உ.பி. கோர்வாலில் பகுகுணாவும் போட்டியிட்டபோது காங்கிரசு வன்முறை வெறியாட்டம் போட்டது. கடந்த ஜூன் மாதம் நடந்து முடிந்த இடைத் தேர்தலில் அரியானாவில் தேவிலாலின் லோக்தளமும், ஜம்மு காஷ்மீர், உ.பி.யில் காங்கிரசும் வன்முறை தேர்தல் தில்லுமுல்லு மோசடிகள் செய்தன.

பாசிச ராஜீவ்-இந்திரா கும்பலுக்காக ராணுவத்தின் துப்பாக்கி முனையில் தேர்தல் நடத்தி 'ஜனநாயக'த்தை அவர்கள் நிலைநாட்டிய மூன்று முக்கிய தேர்தல்கள் 1983 அசாம், 1985 பஞ்சாப் மற்றும் 1988 திரிபுரா சட்டமன்றத் தேர்தல்கள் ஆகும்.



படிப்பகம்

“அந்நியர்களை அசாமிலிருந்து வெளியேற்றும்படி” மூன்றாண்டுகள் தொடர்ந்து போராட்டங்கள் நடந்தன. ஜனாதிபதி ஆட்சி நடந்தது. போராட்டக்காரர்கள் தேர்தலைப் புறக்கணித்தபோதும் வகுப்புக் கலவரங்கள் ஆயிரக்கணக்கானோரைக் காவு கொண்ட போதும் துப்பாக்கி முனையில் பாசிச இந்திரா தேர்தலை நடத்தினார். தொகுதிக்கு 20, 30 பேர்கூட வாக்களிக்காத நிலையில் வெட்கக்கேடான முறையில் முடிவுகள் அறிவித்து காங்கிரசு ஆட்சி அமைத்தது. பஞ்சாபில் சீக்கிய மதவெறியர்கள் மற்றும் அரசின் கூலிப்படைகள் நடத்தும் பயங்கரவாதப் படுகொலைகளுக்கு மத்தியில் பாசிச ராஜீவ் தேர்தல் நடத்தினார். ஆயுதந்தாங்கிய மெய்காவலர்கள் சுற்றிவர வேட்பாளர்கள் பிரச்சாரம் செய்தனர். வாக்காளரைவிட ஆயுதப் படைகளே மிகுதியான அளவு குவிக்கப்பட்டு தேர்தல் நடந்தது.

திரிபுராவில் ‘திரிபுரா தொண்டர் படை’ என்னும் தீவிரவாதிகள் தேர்தலின்போது மலைசாதியினர் அல்லாத பலரைக் கொன்று குவித்தனர். 70000 மாநிலப் போலீசும், **ஐந்து மத்திய ரிசர்வ் போலீஸ் படை பிரிவும், மூன்று அசாம் துப்பாக்கிப் படைப் பிரிவும், ஐந்து எல்லைக் காவல் படைப் பிரிவும்,** ஒரு உ.பி. ஆயுதக் காவல் படைப் பிரிவும் குவிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் தேர்தல் நடக்க இருந்த மாதத்தில் மட்டும் 291 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்திருந்த காங்கிரசின் மத்திய அரசு திரிபுரா மாநிலம் முழுவதும் கலவரப்பகுதியாக அறிவித்து இராணுவத்தைக் குவித்தது இராணுவம், போலீசு, தீவிரவாதிகளின் முழு ஒத்துழைப்போடு மோசடியான தேர்தல்கள் நடத்தி போலி கம்யூனிஸ்டுகளிடம் இருந்து ஆட்சியைப் பிடுங்கியது. பிறகு இதுபற்றி நாடு முழுவதும் அழுது ஒப்பாரி வைப்பதைத் தவிர போலி கம்யூனிஸ்டுகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

## வேலியே பயிரை மேயுது

முன்பு மாநிலப் போலீசு மற்றும் அதிகாரிகளை வைத்துக் கொண்டு தேர்தல்களை நடத்த முடிந்தது. இப்போது மத்திய போலீசு, இராணுவம் மற்றும் மத்திய அதிகாரிகள் இல்லாமல் தேர்தல் நடப்பதில்லை. அந்த அளவு தேர்தல் தில்லுமுல்லு மோசடிகள், தேர்தல் வன்முறைகள் பெருகிவிட்டன. ஆனால் வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? போலீசு-இராணுவமும் தேர்தல் அதிகாரிகளுமே தில்லுமுல்லு மோசடிகள், வன்முறைகளில் ஈடுபடுவதும் வழக்கமாகிவிட்டது.

ஆயுதந்தாங்கிய குண்டர்கள் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்ளும்போது பயந்து பார்வையாளர்களாகவோ, உதவியாளர்களாகவோ மாறுபவர்கள் மட்டுமல்ல, வேட்பாளர்களிடம் விலைபோகும் தேர்தல் அதிகாரிகளும் பெருகிவிட்டனர். இதிலே ஒரு வேடிக்கையான வழக்கு! 1980 சட்டமன்றத் தேர்தலின் போது அர்லாகி தொகுதியில் பிலாமா கிராமச் சாவடி. ஆளுங்கட்சியின் ஆயுதந்தாங்கிய குண்டர்கள் நுழைந்து தமது வேட்பாளருக்கே எல்லா வோட்டுகளையும் போட்டனர். புகார் நிரூபிக்கப்படவே அங்கு மறு வாக்குப் பதிவு நடந்தது. அப்போது தேர்தல் அதிகாரிகளே வாக்காளர்களை

ஆயுதமேந்திய ஆளுங்கட்சி குண்டர்கள் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்ளும்போது பயந்து ஓடி ஒளிந்து கொண்ட போலீசார்



விரட்டி அடித்துவிட்டு ஆளுங்கட்சிக்கு முத்திரை குத்தி வோட்டுப் போட்டுக் கொண்டார்கள். இந்தப் புகாரும் நிரூபிக்கப்படவே மூன்றாவது முறை வாக்குப் பதிவு நடந்தது.

ஆயுதந்தாங்கிய குண்டர்கள் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றும்போது துப்பாக்கிகளைத் தலைகீழாகக் குத்திக் கொண்டோ ஓடி ஒளிந்து கொண்டோ போலீசார் வேடிக்கை பார்க்கிறார்கள். ஒரு வாக்குச் சாவடிக்கு சராசரி 2, 3 பேருக்கு மேல் காவல் போடவும் முடியாது. தொலை தூரங்களில் தனித்தனி கிராமங்களில் பெரும் எண்ணிக்கையில் ஆயுதந்தாங்கிய குண்டர்கள் வந்து தாக்கும்போது தொடை நடுங்கிகளான போலீசார் மண்டியிட்டு வரவேற்கின்றனர். நகரங்களில் ஆளுங்கட்சிக்கு ஆதரவான ஆயுதந்தாங்கிய குண்டர்களுக்கு உடந்தையாக இருக்கும்படி உயர் அதிகாரிகளே உத்திரவு போடுகின்றனர்.

**சட்டப்படி, தேர்தல் விதிமுறைகளின்படி அமைதியான,** சுதந்திரமான தேர்தலைக் குலைக்கும் குண்டர்களை கடுமையாக ஒடுக்கும்படி போலீசுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் ஆளும்கட்சியினர் உத்திரவுப்படிதான் போலீசாரும் தேர்தல் அதிகாரிகளும் நடக்கிறார்கள். தேர்தல் சமயத்தில் அதிகாரிகளை மாற்றக்கூடாது என்று விதிமுறைகள் உள்ளன. அதேபோல தேர்தலுக்குப் பிறகு அவர்களைப் பழிவாங்கவும் கூடாது என்று விதிமுறைகள் உள்ளன. இருப்பினும் இந்த விதிமுறைகள் எல்லாம் பின்பற்றப்படுவதே கிடையாது.

1977இல் ஜனதாவும், 1980 இல் மீண்டும் இந்திராவும் ஆட்சிக்கு வந்தபோது எதிர்க் கட்சி ஆதரவாளர்களாக கருதப்பட்டவர்களைக் கூண்டோடு பழிவாங்கினர். இடமாற்றம் செய்தனர். 1980இல் பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி வந்தபோது அன்றைய மத்திய உள்துறை மந்திரி ஜெயில் சிங் எல்லா போலீசு அதிகாரிகளையும் தூக்கி அடித்தார். அதே சமயம் மேற்கு உத்திரப்பிரதேசத்திலே ஜாட் சாதி அதிகாரிகள் என்றால் சரண்சிங் ஆதரவாளர்களாய் இருப்பார்கள் என்று அத்தனை பேரையும் கிழக்கு உத்திரப்பிரதேசத்துக்கு விரட்டினார்கள்.

1972 பீகார் இடைத் தேர்தலில் இந்திராவின் பினாமி ஊழல் மந்திரி எல். என். மிஸ்ரா போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் தமது தேர்தல் தில்லுமுல்லு மோசடிக்கு உடந்தையாய் இருக்காத பீகார் தலைமைப் போலீசு அதிகாரி டி. நாத், தேர்தல் வேலை முடிந்து திரும்பி வந்தார். அவருக்குத் தெரி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

யாமலேயே வேலையைப் பறித்துக் கொண்டு பொறுப்பேற்க அலுவலகத்தில் வேறொரு நபர் காத்திருப்பதைக் கண்டார். அப்புறம் பீகாரில் நடந்த எல்லாத் தேர்தல்களிலும் ஆயுதந்தாங்கிய குண்டர்களின் கூட்டாளிகளாகவே போலீசார் நடந்து கொள்கின்றனர்.

நடந்து முடிந்த அலகாபாத் இடைத் தேர்தல்களில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழிருந்த கிரிமினல் குற்றவாளிகளை விடுதலை செய்தனர். மாநில முதல்வர் உட்பட மந்திரிகளுடன் அவர்கள் கலந்து பேசி தேர்தல் மோசடிகள் வன்முறைகளுக்குத் திட்டமிட்டனர். அதிகாரிகள் இதற்கு உடந்தையாயிருந்தனர். எதிர்க்கட்சிகளும் குண்டர்படை திரட்டித் தயாராயிருந்ததாலும், வாக்காளர்கள் பெரும் அளவு ஆளும்கட்சி மீது வெறுப்புற்றிருந்ததாலும் தேர்தல் மோசடி-வன்முறைக்கு ஆதரவு கொடுக்க மறுத்துவிட்டார் தொகுதி தலைமை தேர்தல் அதிகாரி.

தேர்தல் சமயத்தில் ஆட்சியிலுள்ளவர்கள் வாக்குறுதிகள் கொடுக்கவோ, சலுகைகள் தரவோ கூடாது. அவ்வாறு செய்வது தேர்தலில் லஞ்ச ஊழலாகும் என்று மரபுகள் சொல்லுகின்றன. ஆனால் ஒவ்வொரு இடைத் தேர்தலின் போதும் கோடி கோடியாக அரசுப் பணத்தை வாரி இறைத்து ஓட்டுப் பொறுக்குகின்றன ஆளும் கட்சிகள். கடந்த ஜூன் இடைத் தேர்தலில் உ.பி. தண்டா தொகுதிக்கு மட்டும் 25 கோடி ரூபாயும் அலகாபாத் தொகுதிக்கு 100 கோடி ரூபாயும் திட்ட ஒதுக்கீடு செய்வதாக சலுகைகளைக் காங்கிரசு ஆட்சி வழங்கியது.

## வோட்டுக்கு வேட்டு

ஜனநாயகபூர்வமான, சுதந்திரமான, அமைதியான தேர்தலை உத்திரவாதம் செய்வதற்காகத்தான் தேர்தல் கமிஷன் ஒருசுயேச்சையான அமைப்பாக இயங்குவதாக பிரமையூட்டுகிறார்கள். ஆனால் அதுவும் அரசு அமைப்பின் ஒரு அங்கமே. அதன் அதிகாரிகளையும் அரசுதான் நியமிக்கிறது. தேர்தல்களை நடத்தவோ தேர்தல் விதிகளை அமுலாக்கவோ தனியே அதிகார நிர்வாக அமைப்பு எதுவும் தேர்தல் கமிஷனிடம் கிடையாது. தேர்தல் விதிகளைத் தெரிந்தே, வேண்டுமென்றே மீறும் அரசு நிர்வாக எந்திரத்தை நம்பியே தேர்தல் கமிஷன் இயங்குகிறது. எனவே ஒருபோதும் ஜனநாயகபூர்வமான, சுதந்திரமான, அமைதியான, உண்மையான தேர்தல்கள் நடக்காது. தேர்தல் தில்லுமுல்லு, மோசடி, வன்முறைகளை தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது.

தேர்தல் தில்லுமுல்லு, மோசடி வன்முறைகளுக்காக கிரிமினல் குற்றவாளிகளை — ஆயுதந்தாங்கிய குண்டர்களை ஓட்டுப்பொறுக்கிகள் கூலிக்கு வைத்துக் கொள்வதோடு ஊட்டி வளர்க்கிறார்கள். இது வளர்ந்து இப்போது அந்தக் கிரிமினல் குற்றவாளிகளே அரசியலில் நேரடியாக இறங்கி தலைவர்களாகிறார்கள். எம்எல்ஏ, எம்.பிகளாகமட்டுமல்ல, மந்திரிகளாகவும் ஆகிவிடுகிறார்கள். பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், தலைநகர் புதுடில்லியிலேகூட கிரிமினல் குற்றவாளிகள் இப்படி வளர்ந்துவிட்டதை பல உதாரணங்களுடன் முதலாளித்துவப் பத்திரிக்கைகளே எழுதுகின்றன.

“துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது” என்று சொன்னார் மாவோ. அதுதான் உண்மை என்று முழங்கினார்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள். “துப்பாக்கிக் குழாயிலிருந்து அதிகாரம் வராது; புகைதான் வரும்” என்று கிண்டல் செய்தார் போலிக் கம்யூனிஸ்டு தலைவர் பசவபுன்னையா. “வோட்டு என்றால் வோட்டு; வேட்டு என்றால் வேட்டு! இதுதான் எங்கள் கொள்கை. இப்போது வோட்டு முறையே இருக்கிறது. எனவே வோட்டு முறையைப் பின்பற்றுகிறோம். வேட்டு முறை வந்தால் நாங்களும் வேட்டு முறையைக் கடைப்பிடிப்போம்!” என்று சவடால் அடித்தார் மாண்டுபோன மற்றொரு போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் பாலசுப்பிரமணியம். ஆனால் அப்போதே வேட்டு முறையில் — அரைப் பாசிசம் என்றார்கள் போலிக்கம்யூனிஸ்டுகள்— மேற்கு வங்கத்தில் காங்கிரசு ஆட்சியை நிறுவினார் பாசிச இந்திரா. இப்போதும் துப்பாக்கி முனையில் கலவரப் பகுதியாக்கி திரிபுராவில் காங்கிரசு ஆட்சியை நிறுவினார் அவரது வாரிசு பாசிச ராஜீவ். பாசிஸ்டுகள் வேட்டு முறைதான் தமது தேர்தல் முறை என்று காட்டினர். போலிக் கம்யூனிஸ்டுகள் நாடு முழுவதும் தேர்தல் தில்லுமுல்லு—மோசடி—வன்முறை பற்றி ஒப்பாரி வைக்கின்றனரே. தவிர வேட்டு முறைக்கு—புரட்சி முறைக்குத் திரும்பவில்லை.

ஆக, “துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது” என்கிற புரட்சியாளர்களின் வாக்குதான் யதார்த்தமாய் உள்ளது என்பதே நிரூபிக்கப்பட்டு வருகிறது. துப்பாக்கி முனையிலேதான் தேர்தலைக்கூட நடத்துவது என்று ஓட்டுப் பொறுக்கிகள் முடிவு செய்து செயல்படும்போது வோட்டு முறைக்கே வேட்டு வைப்பது, புரட்சி முறைக்கே வழிநடப்பது தவிர வேறு என்ன செய்வது?

● ஆர்.கே.



## இந்திய இராணுவம்: உளவாளி உறைவிடம்

கள்ளச் சாராய-கருப்புப் பண-விபச்சாரத் தரகர்கள்—சினிமாக்காரன்கள் — ஓட்டுப் பொறுக்கிகள் — போலீஸ்காரன்கள்—பத்திரிக்கை முதலாளிகள் முதலானோர் கிரிமினல் கும்பலாகக் கூட்டுச் சேர்வதைப் போலவே—

கள்ளக் கடத்தல், அன்னிய நாடுகளுக்கு ராணுவ ரகசியங்களைக் கடத்தி உளவு சொல்வது முதலான தேசவிரோத தொழிலில் ராணுவ அதிகாரிகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் கூட்டுச் சேர்கின்றனர் என்பது இப்போது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

சமீபத்தில் டெல்லியைச் சேர்ந்த ‘சன்னி டிராவல் ஏஜென்சி’ என்ற ஒரு பயண ஏற்பாட்டு நிறுவனத்தின் பெயரில் ரகசியமாக செயல்பட்டு வந்த தேசவிரோத கும்பல், பாகிஸ்தானுக்கு ராணுவ ரகசியங்களைக் கடத்தி உளவு வேலை செய்ததாக புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்தியர்களையும் இருபதுக்கும் மேலான பாகிஸ்தானியர்க்ளையும் கொண்ட இந்த கும்பல் நீண்ட காலமாக டெல்லியைச் சேர்ந்த ஓட்டுப் பொறுக்கிகள் மற்றும் ராணுவ உயர் அதிகாரிகளுடன் நெருக்கமாக உறவு வைத்திருந்தது. ராணுவ கண்டோன்மெண்ட் பகுதியைச் சேர்ந்த டெலிபோன் ஆபரேட்டர்கள், லைன்மேன்கள் கூட இதில்சம்பந்தப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ரகசியங்களைச் சேகரித்து பாகிஸ்தானுக்கு அனுப்பும் உளவுத் தொழிலை இக்கும்பல் திறமையாக செய்துள்ளது. இதற்கு ராணுவ அதிகாரிகளே உடந்தையாகஇருந்துள்ளனர்.

உளவாளிகளைப் பிடித்துவிட்டதாகப் பீற்றிக் கொள்ளும் அரசு, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ராணுவஅதிகாரிகள், ஓட்டுப் பொறுக்கிகளைப் பற்றி வெளியே தெரியாதபடி திட்டமிட்டே மறைத்து விட்டது. கம்யூனிசப் புரட்சியாளர்களை தேசத் துரோகிகள், சமூக விரோதிகள் என்று அவதூறு சேற்றை வாரியிறைக்கும் ஓட்டுப் பொறுக்கிகளும் அவர்களின் அரசும், ராணுவமும்தான் உண்மையில் தேசத்துரோகிகள் என்பதை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளைப் பரிதவிக்கவிட்ட அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



மதுரை மாவட்டம்— உசிலம்பட்டி வட்டம்; முதல் தரமான பருத்தி உற்பத்தி செய்துகொடுத்த விவசாயிகளைக் கொண்ட பகுதி. கடந்த இரண்டாண்டு கால கொடிய வறட்சிக்குப் பிறகு இவ்வாண்டு ஓரளவு மழை பெய்ததை யடுத்து விவசாயிகள் தீவிரமாக விவசாயத்தில் ஈடுபட்டும்கூட பலன் இல்லாமல் போய்விட்டது. வெள்ளை ஈக்கள் எனப்படும் பூச்சிகளின் தாக்குதலால் பருத்திப் பயிர் முடமாகி விட்டதோடு, எந்த பூச்சி மருந்து அடித்தும்கூட கட்டுப்படுத்த முடியவில்லை. அரசு அங்கீகாரத்தோடு விற்கப்படும் போலியான பூச்சி மருந்துகளை வாங்கித் தெளித்து போண்டியாகி விட்டார்கள் விவசாயிகள். வாங்கிய கடனுக்கு வட்டிமேல் வட்டி ஏறி விவசாயிகளிடமிருந்து நிலமே பறிபோகிறது. விவசாயிகளோ எந்த நம்பிக்கையுமின்றி சூன்யமான நிலையில் வாழ்கின்றனர். விவசாயஅதிகாரியிலிருந்து கலெக்டர்வரை முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், இப்பிரச்சினையை விவசாயிகளிடம் தெருமுனைக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் பிரச்சாரம் செய்து வந்த நாங்கள், விவசாயிகளை அணிதிரட்டி ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானித்து, போலீசிடம் அனுமதி கேட்டபோது, "ஆசிரியர்—அரசு ஊழியர் போராடுகின்றனர்; 144 தடை உத்திரவு உள்ளது" என்று கூறி டி.எஸ்.பி அனுமதி தர மறுத்துவிட்டார். ஆனாலும் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தை நடத்துவது, போலீசார் தடுத்தால் கைதாவது என்ற முடிவுடன் 11.7.88 அன்று பகுதிவாழ் விவசாயிகளைத் திரட்டி உசிலம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம். தோழர் நல்லு தலைமையில், செங்கொடிகள் அசைந்தாட விண்ணதிர முழக்கங்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்டு வட்டார வளர்ச்சி அதிகாரி அலுவலம் முன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தோழர்கள் பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கோரியும், போலியான பூச்சி மருந்துகளுக்கு லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசு அங்கீகாரம் அளித்த அதிகாரிகளை தண்டிப்போம் என்றும் விளக்கிப் பேசினர்.

ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தையும் வி.வி.மு.யின் போராட்ட உறுதியையும் கண்டு விவசாயிகள் பெருமளவில் எம் பின்னே அணிதிரளுவதைப் பார்த்து அரண்டுபோன அரசு, தனது மோப்ப நாய்களான கியூ பிரான்ச் எனப்படும் நக்சலைட் ஒழிப்பு ரகசிய போலீசை ஏவிவிட்டுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன் எங்கள் பகுதியில் சப்இன்ஸ்பெக்டராக இருந்த நவநீத கிருஷ்ணன் இன்று மாவட்ட கியூ பிரான்ஞ்ச் உயர் அதிகாரியாகியுள்ளார். அவர் வேலை செய்த காலத்தில் பழக்கப்பட்ட முக்கிய புள்ளிகளிடம் சாதிஅடிப்படையில் சுகசேமம் விசாரித்துக் கொண்டு எமது தோழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரைப் பற்றிரகசியமாக விசாரித்து வருகிறார். இவர் தலைமையிலான போலீசு கும்பல் பகுதிவாழ் மக்களிடம், 'வி.வி.மு. காரனுங்க தீவிரவாதிங்க; குண்டு வெச்சிருப்பானுங்க. இவங்களைப் பத்தி எல்லா தகவலையும் சொல்லிடுங்க' என்று நைச்சியமாகவும் மிரட்டலாகவும் கேட்டுத் திரிகிறது. இன்னும் தோட்ட பகுதிக்கெல்லாம் வந்து சுத்திப் பார்த்து 'இங்கேதான் கூடுறாங்களா; எப்ப கூடுறாங்கன்னு எங்களுக்கு தூது சொல்லணும். இவனுங்களமொத்தமாக புடிக்கணும்' என்று கூறிக்கொண்டு இந்த நாய்கள் சமீப காலமாக இப்பகுதியில் சுற்றிச் சுற்றி வருகின்றன.

விவசாயிகளைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு அவர்களின் நலனில் எள் முனையளவும் அக்கறை காட்டாத அரசுதான், நியாயமான கோரிக்கைக்காகப் போராடும் விவசாயிகளின் இயக்கத்தைக் கருவறுக்க நாயாய் அலைகிறது. ஓட்டுப் பொறுக்கிகளின் ஆட்சியானாலும், கவர்னரின் அதிகார வர்க்க ஆட்சியானாலும் அதன் தன்மை ஒரு போதும் மாறிவிடாது. ஆனால் விவசாயிகளின் விவசாயப் புரட்சியை லட்சியமாகக் கொண்டுள்ள வி.வி.மு இந்த மோப்ப நாய்களின் சலசலப்புகளைக் கண்டு ஒரு நாளும் பணிந்து விடாது. விரைவில் பகுதிவாழ் விவசாயிகளிடம் இந்த மோப்ப நாய்கள் உதை பட்டு ஓலமிட்டுக் கொண்டு ஓடப் போவது நிச்சயம்.



தகவல்:
விவசாயிகள் விடுதலைமுன்னணி
உசிலை வட்டம்

## காவிரி நீர்: தமிழகத்தின் உரிமை முழக்கம்

கடந்த 9..7.88 முதல் 16.7.88 முடிய 8நாட்கள் தஞ்சை மாவட்டம் திருவோணம், திருவையாறுஒன்றிய கிராமங்களில் காவிரி நீர்: தமிழக உரிமைக்கான தொடர் பிரச்சார இயக்கத்தை விவசாயிகள் விடுதலை முன்னணி நடத்தியது.

ஆதி காலம் தொட்டு காவிரி நீரை பயன்படுத்திய நுகர்வுரிமை, மேலும் 1892, 1924 ஆகிய ஆண்டுகளில் ஒப்புக் கொள்ளப் பட்ட உடன்பாடுகள் ஆகியஇரண்டையுமே கர்நாடக அரசு காலில் போட்டு மிதித்து தமிழகத்திற்கு நீர்விட மறுப்பதால் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு டெல்டா பிரதேசமே பாலைவனமாக காட்சியளிக்கிறது. பிராந்தியவெறி இனவெறியைத் தூக்கிப் பிடித்து கர்நாடக அரசும், மத்திய அரசும் பிரச்சினையை சிக்கலாக்கி வருவதோடு மத்திய அரசின் காலை நக்கி பிழைக்கும் பிழைப்புவாதிகளாக தமிழக திராவிட கட்சிகள் இருப்பதால் எந்த சலசலப்புமின்றி இவ்வளவு பெரிய சிக்கல்வளர்ந்து வருகிறது.

இனவாதம், பிழைப்புவாதம் ஆகியவைகளை தூபம் போட்டு பிரச்சினையை சிக்கலாக்கும் அனைத்து ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளை திரைகிழித்தும், தமிழகத்தின் காவிரிநீர்உரிமையை விளக்கியும், கிளர்ந்தெழுந்து போராடுவதே பிரச்சினைக்கு தீர்வு என்று அறைகூவல் விடுத்தும் 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஒலிப்பெருக்கியுடன் விரிவாக பிரச்சாரம் நடைபெற்றது.

மக்கள் திரளாக வந்துகூடி பிரச்சாரத்தைக் கேட்டனர். பிரச்சாரம் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றது. மக்கள் பிரச்சார செலவுகளுக்கு நிதியுதவி அளித்ததோடு தோழர்களுக்கு உணவு, சோடா, டீ போன்றவை வாங்கிக் கொடுத்து உற்சாகப்படுத்தினர். பிரச்சார இயக்கம் விவசாயிகளிடம் குறிப்பிடத்தக்க வீச்சை ஏற்படுத்தியுள்ளது.

இவண்,
விவசாயிகள் விடுதலை முன்னணி
திருவோணம், திருவையாறு ஒன்றியங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



தடியடி நடத்தும் போலீசாரை கண்டித்து போலீஸ் ஜீப் முன் படுத்து ஆசிரியர் - அரசு ஊழியர் மறியல் செய்தனர்.

# சாதனைகளும் படிப்பினைகளும்

சரியாக ஒரு மாதம் நடந்த ஆசிரியர்—அரசு ஊழியர்வேலைநிறுத்தம்—போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது. வெற்றி—என்று சொல்லும்போது ஆசிரியர்—அரசு ஊழியர் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய ஜாக்டீ—கூட்டமைப்பின் கோரிக்கைகள் அனைத்தையும் பெற்றுவிட்டார்கள்; போராட்டத்தின்போது இழப்புகள், பின்னடைவுகள் அதன்பிறகு பழிவாங்குதல்கள் இல்லாமல் சாதித்துவிட்டார்கள் என்பதாக சொல்லவில்லை. இன்றைய சூழ்நிலைமை—பல்வேறு காரணங்களால் அப்படிப்பட்ட வெற்றி சாத்தியமில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பதும் மிகையாகும்.

பெரும்பான்மையான ஆசிரியர் அரசு ஊழியர்களைக் கொண்ட ஜாக்டீ—கூட்டமைப்பு மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம், ஒரு மாத போனசு போன்ற ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். ஜே. எஸ். ராஜூ, முத்துசாமி போன்றோர் தலைமையிலான ஆசிரியர் சங்கங்களும், டி. மோகன், சிவ. இளங்கோ போன்றோர் தலைமையிலான அரசு ஊழியர்—அதிகாரிகள் சங்கங்களும் ஆரம்ப நிலை வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை இவை ஏற்கனவே பாசிச எம்ஜிஆரால் விலைக்கு வாங்கப்பட்டவர்களால் தலைமை தாங்கப்படுபவை.

கவர்னர் ஆட்சியின் மிரட்டல் அடக்குமுறை, அவதூறுகளுக்கு அடிபணியாது—அஞ்சாது ஜாக்டீ-கூட்டமைப்பு உறுதியாகப் போராடியது. தலைமைச் செயலக ஊழியர்கள்—அதிகாரிகள், மாநகராட்சி ஊழியர்கள்—அதிகாரிகள்போன்ற வேறு சில பிரிவினரும் வேலை நிறுத்தம்—போராட்டத்தில் குதித்தனர். மருத்துவர்கள், தாதிக்கள் கூட அடையாளவேலை நிறுத்தம் செய்தனர். பல்வேறு பிரிவுஅரசுப் பொறியியலாளர்களும் வேலை நிறுத்தத்துக்கு நாள் குறித்தனர்.

ஆசிரியர்—அரசு ஊழியர் மத்தியிலிருந்து முற்றாகத் தனிமைப்பட்டுவிடும் அச்சம், உள்ளிருந்து வேலைநிறுத்தம்-போராட்டத்தை உடைத்துச் சீர்குலைக்கும் நோக்கம் ஆகிய காரணங்களுக்காக சிவ. இளங்கோ போன்ற கருங்காலிகளின் தலைமையிலான சங்கஙளும் போராட்டத்தில் குதித்தன.

சிறுபான்மையினரான ஒரு பகுதியினர் மட்டுமே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், பொதுமக்களிடையே ஆதரவு இல்லை, எதிர்க்கிறார்கள் எனவும் பத்திரிக்கைகள் மற்றும் வானொலி—வானொளி மூலம் அரசு அவதூறுப் பிரச்சாரம் செய்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர்மீது வேலை நீக்கம் உட்பட பல ஒழுங்கு நடவடிக்கைகள் எருத்தும், புதிய நபர்களை நியமித்தும் போராட்டத்தை ஒடுக்கவும் முயன்றது. போராட்டத்தைத் தூண்டியதாகத் தலைவர்களையும், அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்—அரசு ஊழியர்களையும் ஆயிரக்கணக்கில் பிடித்து சிறையிலடைத்தது.

இலங்கை ஆக்கிரமிப்பு போர், பிரதமரின் உல்லாசப் பயணம், தொழிலதிபர்களுக்கு சலுகைகள் என்று கோடி கோடியாகக் கொட்டிக் கொண்டிருக்கும்போதே ஆசிரியர்—அரசு ஊழியர் கோரிக்கைகளை ஏற்கக்கூடிய நிதி நிலை இல்லைஎன்றுஅடாவடியாகமறுத்தது, அரசு.

கல்லூரி ஆசிரியர்களுக்குச் சில சலுகைகள் கொடுப்பதாக அறிவித்துப் பிளவுபடுத்த முயன்றது. அதற்கு மசியாது அவர்கள் மறுத்துப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். 70 ரூபாய் இடைக்கால நிவாரணமென அறிவித்தது, அரசு. ஒரு பிரிவு ஆசிரியர்கள் ஊசலாடி வேலைக்குத் திரும்பியபோதும் ஜாக்டீ-கூட்டமைப்பு உறுதியாக நின்றது. அதன் பிறகு ஐந்தாம்படை வேலை செய்வதற்கென்றே போராட்டத்தில் குதித்த சிவ. இளங்கோ போன்ற கருங்காலித் தலைமையினரும் ஜே.எஸ். ராஜூ, முத்துசாமி போன்ற சில பிரிவு ஆசிரியர் சங்கத்தினரும் அரசுடன் ஒரு சமரச ஒப்பந்தம் போட்டுக் கொண்டனர் வேலைநிறுத்தம் பிசுபிசுத்து விட்டதைப் போல தோற்றமளிக்கும்படி உடைத்துக்கொண்டுவேலைக்குத் திரும்பினர்.

ஆனாலும் நிலைகுலையாத ஜாக்டீ—கூட்டமைப்பு போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது· தெருமுனைக் கூட்டங்கள் மூலம் மக்கள் ஆதரவு திரட்டுவது, ஒப்பந்த நகல் எரிப்பு, சென்னை கோட்டை முற்றுகை என்று திட்டமிட்டு முன்னேறினர். அத்தியாவசியப் பணித்துறை சட்டத்தை ஏவி அடக்கி ஒடுக்க முடிவுசெய்த அரசு ஜூலை 21ந் தேதியை இறுதி எச்சரிக்கை நாளாகக்குறித்தது.

வேலை நிறுத்தப் போராட்டத்தின் இறுதி நாளான அன்று பாசிச ராஜீவின் எடுபிடிகளான கவர்னரும் அவருடைய ஆலோசகர்களும் போலீசை ஏவி முற்றுகைப் போராட்டத்தை ஒடுக்க முயன்றனர். ஆசிரியர்களும்—அரசு ஊழியர்களும் எதிர்த்து நின்று வீரதீரத்துடன் போராடி வென்றனர். முற்றுகைப் போராட்டத்திற்காக மாவட்டங்களில் இருந்து சென்னை வந்த ஆசிரியர் அரசு ஊழியர்கள் புறநகர் பகுதியிலேயே இருபது முனைகளில் மடக்கிக் கைது செய்யப்பட்டனர். சென்னை நகரின் பிரதானச் சாலைகளில் ஆசிரியர்--அரசு ஊழியர் எனப் போலீசார் சந்தேகப்படக்கூடிய அப்பாவி மக்கள்


படிப்பகம்

www.padippakam.com

அத்தனை பேரையும் கைதுசெய்தனர். கவர்னர் ஆட்சியில் காட்டு தர்பார் நடத்துவதற்காகவே நியமிக்கப்பட்ட நகர போலீசு ஆணையாளர் துரை முன்னின்று ஆயுதந்தாங்கிய போலீசுப் படைக்குத் தலைமையேற்று முற்றுகைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தார். எல்லாத் தடைகளையும்மீறி சென்னை அண்ணா சாலையில் திரண்ட ஆசிரியர் அரசுஊழியரை குதிரைப் படையை ஏவியும், ஜீப்புகளை மோதுமாறு அதிவேகத்தில் ஓட்டி மிரட்டியும், தடியடிகள் நடத்தியும், ஒவ்வொருவராகத் தரதரவென இழுத்துப் போயும் ஒடுக்க முயன்றது போலீசு. வெள்ளமெனத் திரண்ட ஆசிரியர்- அரசு ஊழியர் முன்னே கூலிப்படையின் எத்தணிப்புகள் பலிக்கவில்லை. மறியல், பொய்ப் பிரச்சாரத்துக்கு எதிராக ஒப்பாரி வைப்பது, அரைநிர்வாண—மனித சங்கிலி, பஜனை போன்ற பல வடிவங்களை போராட்ட காலங்களில் அவர்கள் மேற்கொண்டாலும் இறுதி நாளன்று போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் எழுதினார்கள்.

போராட்டம்-- மறியல் என்றதும் போலீசு வந்து கைது செய்வதாக அறிவித்ததும்பணிவோடும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடும் லாரிகளில் ஏறும் வழக்கத்தை ஓட்டுக் கட்சிகளும் அவர்களுடைய சங்கங்களும் உருவாக்கிவிட்டன. அதற்கு மாறாக கைதாக மறுத்தும், கைதானபிறகு திமிறிக் கொண்டும் தப்பிக் கொண்டும் வந்து அடக்குமுறைகளைத் துச்சமென மதித்து ஐந்து மணிநேரம் போக்குவரத்தையே நிலைகுலைய வைத்தனர். கோட்டையை முற்றுகையிடுவதை போலீசார் தடுத்தபோது அதை வெற்றிகரமான முறையில் சாலை மறிப்புப் போராட்டமாக மாற்றினர்.

இறுதியாக ஜாக்டீ--கூட்டமைப்புக்கும் அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது. ஜாக்டீ—கூட்டமைப்பின் கோரிக்கைகள் அனைத்தையும் அரசு ஏற்றுக் கொண்டு வெற்றி ஈட்டிப் போராட்டத்தை விலக்கி கொள்ளவில்லைதான். இருந்தாலும் ஒரு மாத போராட்டத்துக்குப் பிறகு, சில கருங்காலி சங்கங்களின்துரோகத்துக்குப் பிறகு ஒரே அடியாகக் காலவரையற்ற முறையில் இழுத்தடித்து சக்திகளை வீணடிக்கவும் முடியாது. அவ்வாறு செய்வது எதிர் விளைவையேதோற்றுவித்து போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிடும். உடனடியாக சில கோரிக்கைகள்ஏற்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஊழியருக்கு சமமான ஊதியம், போனசுபோன்ற கோரிக்கைகளை அடாவடியாக மறுத்து வந்த அரசு அவற்றைப் பரிசீலிக்கவும் அதற்காக இலக்குகளுடன் கூடிய ஊதியக்குழு அமைக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. எனவே இதை ஏற்று அடுத்த கட்டப் போராட்டத்துக்குத் தேவையான ஓய்வும், மீண்டும் சக்திகளைத் திரட்டவும் அவகாசம் அவசியமாயிருப்பதால் இப்போதைக்கு விலக்கிக் கொண்டது சரியே.

ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் சமூகத்தின் படிப்பாளிப் பிரிவினரில் பெரும்பான்மையினர். போராட்டத்தின் படிப்பினைகளை உணருவார்கள் என்று நம்புகிறோம். ஜாக்டீ—கூட்டமைப்பு பெரும்பாலும் தி.மு.க மற்றும் போலிக் கம்யூனிஸ்டு கூட்டணியின் ஆதரவாளர்கள் தலைமையிலானது. இந்தப் போராட்டத்தின் பலனை தேர்தல் நோக்கத்தோடு அவர்கள் அறுவடை செய்து கொள்ளவும் ஆட்சிக்கு வந்த பிறகு வாக்குறுதிகளை உதறிவிடவும் தயங்க மாட்டார்கள். எனவே ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் எச்சரிக்கையாய்இருக்கவேண்டும். ஒரு பகுதி அரசு ஊழியர்களின் லஞ்ச ஊழல், ஒரு சில ஆசிரியர்களின் பொறுப்பற்ற போக்குகள் காரணமாக பொது மக்களின் அதிருப்தி கணிசமாக உள்ளது. அந்நிலை மாறவும் மக்களுக்குப் பொறுப்பாக இருந்து ஆதரவுபெறவும், அப்படிப்பட்ட நபர்களுக்கு எதிராக அமைப்பு ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் ஆசிரியர்கள்—அரசு ஊழியர்கள் போராடத் துணிவு பெறவேண்டும்.

பாசிச எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்த பிறகு போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத்தனத்தாலும், சிவ. இளங்கோ போன்றவர்களின் கருங்காலித்தனத்தாலும் முடங்கிக் கிடந்த தொழிற்சங்க இயக்கம் புத்துயிர்—புதுவேகம் பெற போராட்டத் தீயை அணையாது காத்து வரும் சில பிரிவினருள் ஆசிரியர்—அரசு ஊழியர் அடங்குவர். மீண்டும் ஒரு போராட்ட அலையின் முன் வரிசையில் உறுதியாக நின்றதே முக்கிய சாதனையாகக் கருதக் கூடியதுதான்!

## அச்சுறுத்தலுக்கு அஞ்சிடோம்!

தமிழகமெங்கும் புதிய ஜனநாயகம் முகவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணியைச்சேர்ந்த தோழர்களிடம் ‘கியூ பிரான்ஞ்ச்’ எனப்படும் நக்சலைட் ஒழிப்பு ரகசிய போலீசார் விசாரணை என்ற பெயரில் சட்ட விரோதமாக கைது செய்வது, சித்திரவதை செய்வது, அச்சுறுத்துவது முதலான இழிசெயலில் இறங்கியுள்ளனர்.

சீர்காழி பகுதி புதிய ஜனநாயகம் முகவர் தோழர் அம்பிகாபதி. கடந்த ஜூலை 19 அன்று அவர் வீட்டில் இல்லாத நேரத்தில் அவர் துணைவியாரிடம் வந்து பீதியூட்டிவிட்டு, அடுத்த நாள் மீண்டும் அவரில்லாத நேரத்தில் வந்து வீட்டில் அத்துமீறி நுழைந்து, தோழரது நாட் குறிப்பேட்டிலிருந்து சில தாள்களை கிழித்து எடுத்துக் கொண்டு, அதிகாரத் திமிரோடு சவடால் அடித்து விட்டுப் போனது, ஒரு ரகசிய போலீசு நாய்!

கடந்த ஜூலை 15ந் தேதியன்று இரவு பத்து மணியளவில் திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள் தங்கராசு, ரவி, செல்வராசு, பழனி, அருண், துரை ஆகிய ஆறு பேரை கண்டோன்மெண்ட் போலீசார் சட்ட விரோதமாகக் கைது செய்தனர். அவர்களிடம் ரகசிய போலீசார் விசாரணை என்ற பெயரில் மிரட்டினர். போலீசாரின் அராஜகச் செயலைக் கண்டித்து திருச்சி ம.க.இ.க. நகரெங்கும் கண்டன சுவரொட்டிகள் ஒட்டியதும் அரண்டு போய் அனைவரையும் விடுவித்தனர்.

மதுரை உசிலம்பட்டி வட்டாரத்தில், வெள்ளை ஈக்கள் தாக்குதலால் பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டு அவதியுறும் விவசாயிகளை அணிதிரட்டிப் போராடும்விவசாயிகள் விடுதலை முன்னணியின் செயல் வீரர்களைப் பற்றி, அப்பகுதியில் தகவல் சேகரிப்பது என்ற பெயரில் பகுதி மக்களை ரகசிய போலீசார் அச்சுறுத்தி பீதியூட்டி வருகின்றனர்.

சட்ட விரோதமான பேடித்தனமான வழிகளில் இறங்கியுள்ள தமிழக போலீசாரின்அயோக்கியத்தனம், பித்தலாட்டம், அதிகாரத் திமிர் ஒன்றும் புரட்சிகர இயக்கங்களுக்குப் புதிய விசயமில்லை. போலீசாரின் அச்சுறுத்தல், மிரட்டல்களுக்கு அஞ்சி புரட்சிகர இயக்கங்கள் அடி பணிந்ததாக வரலாறுமில்லை. போலீஸ் நாய்களின் மிரட்டல், சதி, சூழ்ச்சிகளை விழிப்புடனிருந்து முறியடிப்போம்!

—ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# பர்மா புகட்டும் படிப்பினை

தமிழ்நாட்டின் பல நகரங்களிலும் பர்மா பஜார்—கடை வீதிகள் இருக்கின்றன. பல இடங்களில் பர்மா காலனி குடியிருப்புகள் இருக்கின்றன. இவற்றின்பூர்வீகம் என்னவென்று இன்றைய இளைய தலைமுறையினர் பலருக்குத் தெரியாது.

ஆங்கிலேயக் காலனிய வாதிகள் உலகம் முழுவதுமிருந்த தமது காலனிய நாடுகளின் இயற்கைச் செல்வங்களைக் கொள்ளையிட மலிவான உழைப்பாளிகள் அவசியமாயிருந்தனர். முன்னேறிய உற்பத்திக்குத் தயாராயிருந்த கடின உழைப்பாளிகளான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்களை பல ஆசிய, ஆஃபிரிக்க நாடுகளில் ஆசைகாட்டியும் நிர்பந்தமாகவும் குடியேற்றினர். பிஜி மற்றும் இந்தோனேசியத் தீவுகளின் கரும்புத் தோட்டங்கள்; மலேசியாவின் ரப்பர் தோட்டங்கள், தகர சுரங்கங்கள்; தென் இலங்கையின் தேயிலைத் தோட்டங்கள், ஆஃபிரிக்காவின் தங்க வைரச் சுரங்கங்கள் ஆகியவற்றில் உழைப்பதற்கு இந்தியர்களை இழுத்துப் போனார்கள். அதே போல பர்மாவின் தேயிலை ரப்பர் தோட்டங்களிலும் தகரச் சுரங்களிலும் உழைப்பதற்கு ஏராளமான இந்தியர்களை, குறிப்பாக தமிழர்களைக் காலனிய வாதிகள் குடியேற்றினர்.

இந்தியாவின் வட கிழக்கு எல்லையில் பர்மா இருப்பதால் நெருக்கமான மக்கள் தொடர்புகள்—உறவுகள் ஏற்பட்டன. குடியேற்ற நாடுகளின் மக்கள் பின்தங்கிய நிலையில் இருந்தபோது இந்திய உழைக்கும் மக்கள் தமது கடின உழைப்பால் அந்நாடுகளை வளமிக்கதாக்கினர். அந்நாட்டு மக்களுடன் கணிசமான அளவு திருமண உறவுகள்கூட ஏற்பட்டும், ஒரு நூற்றாண்டுக்குமேல் வாழ்ந்தும் அந்தமண்ணிலேயேபிறந்து வளர்ந்த புதிய தலைமுறைகள் கூட உருவாகியிருந்தன. அந்நாடுகளின் பூர்வகுடி மக்கள் விழிப்புணர்வு அடைந்து காலனிய ஆதிக்கத்துக்கு எதிராக விடுதலை போராட்டங்களில் குதித்தபோது கணிசமான அளவு இந்தியஉழைக்கும் மக்கள் அவற்றில் பங்கேற்றனர். ஆனால் பெரும்பாலானவர் தாம் வேற்று நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள், அந்த நாடுகளின் விடுதலைப் போராட்டங்களோடு சம்பந்தமில்லாதவர்கள் என்று ஒதுங்கியிருந்தனர். காலனிய ஆட்சியில் கல்வி—அரசு வேலைபெற்றிருந்தவர்களும், கங்காணிகளும், வியாபாரிகளுடன் கந்துவட்டி லேவாதேவிக்காரர்களும் ஆக இருந்த இந்திய வம்சாவழியினர். விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராயிருந்தனர். காலனியவாதிகளின் விசுவாசிகளாய் இருந்தனர்.

அந்நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமையேற்ற முதலாளித்துவக் கட்சிகள் குடியேறிய அனைத்து மக்களையும் காலனிய ஆட்சியாளர்களின் கைக்கூலிகளாகக் கருதினர். பெயரளவிலான சுதந்திரத்திற்குப்பிறகு பூர்வ குடிமக்களின் பின்தங்கிய நிலைக்குக் காரணமான எதிரிகளாக அவர்களால் சித்தரிக்கப்பட்டனர். நூறாண்டுகளுக்கு மேல் உழைத்துத் தொழிலாளர்கள் சேர்த்திருக்கும் சில அற்ப உடமைகள்; கங்காணிகள், வியாபாரிகள், கந்து வட்டி லேவாதேவிக்காரர்கள் குடியேறிய உழைக்கும் மக்களையும் சுரண்டிக் குவித்த சொத்துக்கள்; காலனியஆட்சியில் குடியேறிய நடுத்தர மக்கள்பெற்ற கல்வி மற்றும் அரசு பதவிகள்—ஆகியவற்றைக் காட்டி குடியேறிய மக்கள் அனைவருக்கும் எதிராக இனவெறியைத் தூண்டி, இனக் கலகங்களை நடத்தி அந்நாடுகளின் ஆளும் கட்சிகள் ஆதாயம் தேடிக் கொள்கின்றன. குடியேறிய மக்களின் சொத்துக்களைப் பறிப்பது, குடியுரிமையை மறுப்பது, கல்வி-அரசு வேலை வாய்ப்புகளைத் தடுப்பது ஆகியவற்றின் மூலம் இன ஒடுக்குமுறையை ஏவுகின்றன. ஒரு நூற்றாண்டுக்கு மேல் உழைத்துக் குடியேற்ற நாடுகளின் மண்ணை வளப்படுத்திய, தொழில்களை நிறுவி வளர்த்த உழைக்கும் மக்களை நாடற்றவர்களாக்குகின்றன.

இப்படித்தான் பர்மாவில் குடியேறி வாழ்ந்த ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள்—அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்— நாடற்றவர்களாக்கப்பட்டனர். 1962இல் அவர்களுடைய சொத்துக்களைப் பிடுங்கி கொண்டு விரட்டப்பட்டனர். இந்திய அரசு, பர்மா அரசிடம் நட்டஈடு எதுவும் கோராமல் ஓடிவந்த மக்களுக்கு

# இளஞ்சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி

நாடு முழுவதும் சட்டவிரோதமாக 1400 சிறுவர்கள் கடந்த மூன்றாண்டுகளாக கிரிமினல் கைதிகளுடன் சேர்த்து சிறையிலடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறிய திருட்டுக்கள், டிக்கெட்டில்லாமல் பயணம் செய்தது முதலான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள். குழந்தைகள் நலச் சட்டப்படி, இவர்களை இளங் குற்றவாளிகள் மறுவாழ்வு இல்லத்திற்கு அனுப்பாமல், நாடெங்குமுள்ள சிறைகளில் கிரிமினல் குற்றவாளிகளுடன் சேர்த்து அடைத்து அவர்களின் மனவளர்ச்சியை சிதைத்து விட்டது இந்தியக் காட்டுமிராண்டி அரசு.

சமூக சேவகியும் பத்திரிக்கையாளருமான ஷீலா பார்ஸ் என்பவர் உள்துறை அமைச்சகம் கொடுத்த தகவலின் அடிப்படையில் நாடெங்கும் சிறையிடப்பட்டுள்ள 1400 குழந்தைகளை உடனடியாக மறுவாழ்வு இல்லத்திற்கு அனுப்பக்கோரி 1985 செப்டம்பர் 10ந் தேதியன்று உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு கடந்த மூன்றாண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே போகிறது. கடந்த ஜூலை மத்தியில்மராட்டிய அரசு கால அவகாசம்கோரியதால் 24வது முறையாக விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. சில மாதங்களுக்குமுன் இதே போல மத்திய அரசு அவகாசம்கோரியது. அதற்குமுன் பிரதம நீதிபதி பி.என். பகவதி, சர்வதேச நீதிபதிகள் கூட்டத்தில் கலந்து கொள்வதில் முனைப்பாக இருந்ததால் விசாரணை தள்ளி வைக்கப்பட்டது.

22 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் சம்பந்தப்பட்டுள்ள இந்த வழக்கை, வழக்கமாக வருத்தம் தெரிவித்து விசாரணையைத் தள்ளி வைப்பதென்பது வாடிக்கையாகிவிட்டது நீதிமன்ற உத்திரவுகளைத் துச்சமாக மதிக்கும் மத்திய மாநில அரசுகள்மீது உச்ச நீதிமன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றம் என்று கெஞ்சிய பிறகும்கூட மொத்தத்தில் பாதி மாநில அரசுகளே ஜூலை 15 முடிய பதில் அனுப்பியுள்ளன.

இதில் வேடிக்கை என்னவென்றால் நீதித் துறையே அதன் உத்திரவுகளை மதிப்பதில்லை. 1986ல் உச்ச நீதிமன்றம் அந்தந்த மாவட்ட நீதிபதிகளுக்கு தங்கள் மாவட்டத்தில் சிறையிலடைக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பற்றிய தகவல்களைக் கோரியது. ஆனால் இன்று வரை மாவட்ட நீதிபதிகள் அதை நிறைவேற்றவில்லை. இது தவிர அரசு நிறுவியுள்ள இலவச சட்ட ஆலோசனைக் குழுக்களிடம் உதவி கோரியும்கூட, அவையும் இதனைப் பொருட்டாக மதிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



அகதிகள் முகாம்கள் அமைத்துக் கொடுத்தது. பிறகு அகதிகள் காலனி—குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தது. இப்படி வந்ததுதான் பர்மா காலனி குடியிருப்புகள்.


1962இல் பர்மாவில் நடந்ததற்கும் மற்ற பிற குடியேற்ற நாடுகளில் நடந்ததற்கும் வேறுபாடுகளும் உண்டு. அதற்கு முன்பு பர்மாவை ஆண்ட யூ நூ வின் ஆட்சியில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள்முற்றி நாடே நிலைகுலைந்துவிடும் நிலையிலிருந்தது. அப்போதுதிடீர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி சர்வாதிகாரியானார்தளபதி நீவின். பர்மிய சோசலிசத் திட்ட கட்சியை நிறுவினார். தனியார் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து அரசுடமையாக்கினார். இராணுவம்—அதிகார வர்க்கத்தின்கீழ் அனைத்துப்பொருளாதாரத்தையும் உடமையாக்கி நிர்வகிப்பதுதான் நீவினுடைய சோசலிசம்.

இந்த வகை இராணுவ சோசலிசத்தின்கீழ் சிக்கி பர்மிய பொருளாதாரம் பின்னடைந்து நிலைகுலைந்தது. எங்கும் இராணுவ அதிகார வர்க்க லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளும் கள்ளச் சந்தையுமே ஆதிக்கம் வகித்தன. மக்களுடைய ஜனநாயக, குடியுரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு பாசிச ஆட்சியின்கீழ் 26 ஆண்டுகள் பர்மியமக்கள் நசுக்கப்பட்டனர்.

பர்மாவின் வடமாநிலங்களில் கம்யூனிஸ்டு கட்சியும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களும் தனித்தனியே ஆயுதப்படைகளைக் கட்டியும் ஐக்கிய முன்னணி அமைத்தும் போராடுகின்றன. நீவினுடைய பாசிச ஆட்சியை மேலும் சகிக்க முடியாமல் கடந்த மார்ச் மாதத்திலிருந்து மாணவர்கள் ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகளை நடத்தி வருகின்றனர். ஆளும் கட்சியிலும் பிளவுகளும் பதவிப்போட்டிகளும் வெடித்தன. நெருக்கடிகள் முற்றின. இராணுவ சோசலிசம் தோற்றுப்போய்விட்டது; தானும் கட்சியின் மூத்த தலைவர்களும் பதவி விலகி, அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்வதாக சர்வாதிகாரி தளபதி நீவின் கடந்தமாதம் அறிவித்தார். ஆனால் சிலதினங்களில் நீவினை ஒதுக்கிவிட்டு செயின் எல்வின் என்பவரும் அவருடைய கூட்டாளிகளும் கட்சி மற்றும் அரசுத் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். இராணுவ பாசிச சர்வாதிகாரத்தின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டுகுறைந்தது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்காவது திரும்பும் என்று எதிர்பார்த்த சீர்திருத்தவாதிகளுக்கு இது ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

நமது நாட்டில் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் அட்டூழியங்களைக் கண்டு, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அராஜகங்களைக் கண்டு, இதற்கெல்லாம் இராணுவ சர்வாதிகாரம்தான் தீர்வு என்று சிலர் பாமரத்தனமாக நம்புகின்றனர். நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், பர்மா ஆகிய நாடுகளின் இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் எவ்வளவு கேடானவை என்பதை இவை நிரூபிக்கின்றன. ரத்தத்தின் சுவையை அறிந்த மிருகங்கள் நரவேட்டையில் ஈடுபடுவதுபோல அந்நாட்டு மக்களின் மீது இராணுவ பாசிச கூட்டாச்சியை நிறுவிய பிறகு நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குக்கூட திரும்ப மறுக்கிறார்கள். ஆகவே, இன்றைய நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் தூக்கி எறிந்துபாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகமும் அதன் பிறகு பாட்டாளிகளின் சோசலிசம் காண்பதுதான் சகல பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வாகும்.மற்றபடி ஜனநாயக சோசலிசம், சமாதான சோசலிசம், இஸ்லாமிய சோசலிசம், இராணுவ சோசலிசம் எல்லாமே பித்தலாட்டம்தான்! இதை நிரூபிப்பதற்கான ஒரு சான்றுதான் பர்மாவின் அனுபவம்!

● மணி



உச்ச நீதிமன்ற உத்திரவுக்கே இந்த கதி என்றால் அது வழங்கும் தீர்ப்புகளுக்கு என்ன கதி என்பதை சொல்ல வேண்டியதில்லை. நீதித்துறையின் அதிகார வர்க்க சிவப்பு நாடாத்தனத்திற்கு இளம் பெண் குழந்தைகள் உள்ளிட்ட 1400 சிறுவர்கள் பலிபாக்கப்பட்டு விட்டார்கள். புரிந்து கொள்ளுங்கள், இதுதான் இந்திய நீதித்துறையின் லட்சணம்!

## கொள்ளையர்களின் உற்ற நண்பர்கள்!

போபர்ஸ் கொள்ளையில் ராஜீவ் கும்பல் வகையாக சிக்கிக் கொண்டு மக்களிடம் முற்றாக அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டுப் போயுள்ள நிலையில், 'உற்ற நண்பர்'களான ரஷிய ஏகாதிபத்தியவாதிகள் 'போபர்ஸ் ஊழல் குற்றச் சாட்டுகள் அனைத்துமே வதந்தி!' என்று ராஜீவ்க்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

"ஸ்வீடன் ரேடியோ கிளப்பிய ஒரு வதந்தியை பெரிது படுத்திக் கொண்டு இந்தியப் பத்திரிக்கைகளில் ஒரு பிரிவினர் ராஜீவ் அரசின்மீது குற்றம் சாட்டினர். அன்றிலிருந்து இந்த வதந்திகளுக்கும் அடுக்கடுக்கான குற்றச் சாட்டுகளுக்கும் முடிவேயில்லை. ஆனால் பெரும்பான்மையான இந்திய மக்கள் ஆதாரமில்லாத இத்தகைய விதண்டா வாதங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இது இந்திய நாட்டின்—மக்களின் நலன்களுக்கு எதிரானவர்களுக்கே சாதகமாகஅமையும் என்றும் நம்புகின்றனர்" என்று நியூ டைம்ஸ் என்ற ரஷிய வார இதழ் (எண்: 25, ஜூன் '88) எழுதியுள்ளது. பாசிச சர்வாதிகாரிகளும், ஊழல் கொள்ளையர்களும் சொந்த நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்படும் போதெல்லாம் ஓடி வந்து ஆதரிப்பதுதான் ரஷிய பிராண்டு சோசலிசம்! அதனால்தான் போபர்ஸ் கொள்ளைக்காரன் ராஜீவ் மட்டுமின்றி அவரது ஆத்தா இந்திராவும், தாத்தா நேருவும் ரஷியாவை 'உற்ற நண்பர்கள்' என்று புகழ் பாடுகின்றனர் போலும்!

அது சரி! ராஜீவின் ஊழலுக்கு எதிராகப் போராடுவதாக மார் தட்டிக் கொள்ளும் ரஷிய எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள், தங்கள் குருபீடத்தின் பரிகசிக்கத்தக்க நிலைப்பாட்டை எப்படி மக்களிடம் நியாயப்படுத்தப் போகிறார்களோ, தெரியவில்லை!



படிப்பகம்

www.padippakam.com

மாஜ்வாதி ஜன்தா தள்— சோசலிஸ்ட் மக்கள் கட்சி. இது ஜனதா, லோக்தள், ஜன் மோர்ச்சா மற்றும் காங்கிரசு (சோசலிஸ்ட்) ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து உருவாக்கியிருக்கும் அகில இந்திய ''தேசிய''க் கட்சி. ஆகஸ்டு 15ந் தேதி இந்தப் ''புதிய'' கட்சியின் தோற்றம் முறைப்படி பிரகடனமாகும்.

இணையும் நான்குகட்சிகளின் பெயர்களில் இருந்து 'வெட்டி ஒட்டிய சொற்கள்தான் ''புதிய'' கட்சியின் பெயர். ஜனதாக் கட்சியின் தேர்தல் சின்னம்; அது லோக்தள் கட்சியின் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் — இவை தான் புதிய கட்சியின் சின்னமும் கொடியுமாகும். இப்படியான ஒட்டுகளின் கூட்டுதான் பாசிச ராஜீவின் காங்கிரசுக்கு தேசிய மாற்று.

இதே போலதான் புதியஎதிர்க் கட்சியின் கொள்கைகளும் திட்டங்களும்இணையும் கட்சிகளினுடைய வற்றில் இருந்து பொறுக்கி சேர்க்கப்படும். இடதும் இல்லை வலதும் இல்லை, இது மையவாதக் கட்சி என்று அதன் பெரும்பான்மையான தலைவர்கள் கூறுகிறார்கள். இல்லை, மையத்துக்கு இடதுபக்கம் சாய்ந்த கட்சி என்று அதன் காங்கிரசு மற்றும் சோசலிசபூர்வ குடியினர் கூறுகிறார்கள்.

ஜனநாயக, மதசார்பற்ற, சோசலிச சமுதாயம் காண்பது; அதிகாரத்தைப் பரவலாகப் பகிர்ந்தளிப்பது; தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது; வாக்களிக்கும் உரிமையைப் 18 வயதினர்வரை மாற்றுவது, வேலைக்கான உரிமையை அடிப்படை உரிமையாக்குவது, இலங்கையில் போர் நிறுத்தம் மற்றும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பது, தொழிலாளருக்குச் சாதகமான தொழிலுறவு சட்டங்கள், விவசாயிகளுக்குச் சலுகைகள்; கருப்புச் சட்டங்களை நீக்குவதுஇன்னும்பல சீர்திருத்தங்கள் - வாக்குறுதிகள் அடங்கிய 40 அம்ச நகல்திட்டத்தை இந்தப் புதிய எதிர்க்கட்சி கொண்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கட்டங்களில் காங்கிரசுக்கு எதிரான கட்சிகள் ஒன்றுபட்டு ''தேசிய மாற்றை'' உருவாக்குவது என்றுமுடிவு செய்துள்ளன. முதலாவதாக, ஒரே மாதிரியான மையவாதக் கட்சிகள் ஒரே கட்சியாக ஐக்கியப்படுவது. இரண்டாவதாக தெலுங்கு தேசம், அசாம் கண பரிஷத், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பிராந்தியக் கட்சிகளுடன் ஐக்கியப்பட்ட புதிய எதிர்க்கட்சி இடப் பங்கீடுகள் செய்து கொண்டு தேசிய முன்னணி அமைக்கப்படும். இவை நாடாளுமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படும் தலைமையின் கீழ் ஒரே கூட்டமைப்பாக இயங்கும். மூன்றாவதாக, பாரதிய ஜனதா, 'கம்யூனிஸ்டு' கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொண்டு காங்கிரசுக்கு எதிரான ஓட்டுக்கள் சிதறாமல் நேரடிப் போட்டிக்காக ஒரு கூட்டணி அமைக்கும்.

இந்த மூன்று கட்ட முயற்சியின் முதற்கட்டமாக உருவாவது தான் சோசலிஸ்ட் மக்கள் கட்சி. கடந்த ஜூன் மாத இடைத் தேர்தல்களில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு குளிர் காய்ச்சலும் பீதியும் கண்டுள்ள பாசிச ராஜீவ் கும்பல் இப்போதே புதிய எதிர்க் கட்சியையும் கூட்டணி முயற்சியையும் சாடத் துவங்கிவிட்டது. காங்கிரசை வீழ்த்தி நாட்டை நிலைகுலையச் செய்வதற்கு அந்நிய உளவாளிகள் (சி. ஐ. ஏ.) சதி என்பதிலிருந்து கொள்கைகள் - திட்டங்கள் இல்லாத சந்தர்ப்பவாதிகளின் கூட்டு என்பது வரை பலவாறும் சாடுகிறது.

தேர்தல் வெற்றியைக் குறி வைத்து சேர்க்கப்படும் கொள்கை திட்டங்கள், சீர்திருத்தங்கள், சலுகைகள், வாக்குறுதிகள், கவர்ச்சி முழக்கங்கள் ஆகியவை அடங்கிய அறிவிப்புகளை வைத்து எந்த ஓட்டுக் கட்சிகளுக்குமிடையே வேறுபாடுகள் காண முடியாது. ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி ஏறக்குறைய ஒரே மாதிரியான அறிவிப்புகளையே முன் வைக்கின்றன. இந்தக் கட்சிகளின் சித்தாந்தத் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாவும் உள்ள பெரிய மனிதர்களே இதை ஒப்புக் கொள்கின்றனர்.

ஆகவே, எந்த ஓட்டுக்கட்சினாலும் அதன் தலைமையினுடைய கடந்தகால நிகழ்கால செயல்பாடுகளின் அடிப்படையிலேதான் எடைபோட வேண்டும். பாசிச ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல் குறிப்பாக ஆயுத பேர ஊழல்கள், அதிகார முறைகேடுகள், பாசிச ஒடுக்குமுறை, கறுப்புச் சட்டங்கள், ஏகாதிபத்திய வாதிகள், தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் கொள்ளைக்கு கூடுதலான வசதிகள், சலுகைகள் ஆகிய மக்கள் விரோத ஜனநாய விரோத, தேச விரோத கொள்கைகள், அதன் ஆடம்பர உல்லாச வாழ்க்கை மற்றும் வெறும் சவடால்கள்—இவை அனைத்தையும் மக்கள் அறிந்து அதன் வீழ்ச்சி தொடங்கிவிட்டது.

பாசிச ராஜீவ் கும்பலின் இந்தப் போக்குகளுக்கு எதிரான 'தேசிய மாற்று' என்று கூறிக் கொண்டு உறவாடும் புதிய எதிர்க் கட்சி, தேசிய முன்னணி மற்றும் கூட்டணியின் யோக்கியதைகள் என்ன? சோசலிஸ்ட் மக்கள் கட்சி என்கிற வீரிய ஒட்டு ரகப் பெயரில் வரும் 'புதிய' கட்சியின் தலைவர்கள் யார் யார்? இவர்கள் அத்தனை பேரும் ஒரே 'தேசிய'க் குட்டையில் ஊறிய மட்டைகள். 1977இல் உருவாகி 1979இல் உடைந்து போன ஜனதாக்கட்சியின் பெரும்பான்மையினர். இவர்களிலும் பெரும்பாலானவர்கள் 1977 தேர்தல் தோல்விக்குப்பிறகு காங்கிரசிலிருந்து கட்சி மாறிகள். இவர்களோடு 1979லும், 1987லும் காங்கிரசு பிளவு காரணமாக எதிர்த் தரப்போடு இணைந்து கொண்டவர்கள். மதுதண்டவாடே, ஜார்ஜ் பெர்ணாண்டஸ் போன்ற முன்னாள் சோசலிஸ்டுக் கட்சித் தலைவர்கள் ஓரிருவர் தவிர இந்தப் புதிய கட்சி முழுவதுமே மாஜி காங்கிரஸ்காரர்களைக் கொண்டதுதான்!

ஆக, உருவாகும் 'புதிய' எதிர்க்கட்சியின் தலைவர்கள் அத்தனை பேருமே 'காங்கிரசு கலாச்

**புதிய மொந்தை**

**பழைய கள்ளு**






படிப்பகம்


www.padippakam.com

சார்'த்தில் ஊறிய லஞ்ச ஊழல் பேர்வழிகள், பதவி வெறியர்கள், கட்சி மாறிகள், அரசியல் பிழைப்பு வாதிகள்தாம்! திருவாளர் புதிய பரிசுத்தம் என்று சித்தரிக்கப்படும் வி. பி. சிங் அவசரநிலை ஆட்சி உட்பட பாசிச ராஜீவ் கும்பலின் அனைத்து அரசியல் பொருளாதார சமூக கலாச்சாரக் கொள்கைகளுக்கு உடந்தையாய் இருந்து அவற்றை வகுத்து அமுலாக்க உதவியவர்தான். இவர்களுடைய கடந்தகால நடத்தை மட்டுமல்ல இப்போதும் பிரதமர் பதவியைக் குறி வைத்து இதன் தலைவர்கள் ஒருவரை ஒருவர் காலை வாரிவிட்டுக் கொள்ளும் சூழ்ச்சிகள் இவர்களது ஆதரவாளர்களையே வெறுப்புக்குள்ளாக்கி வருகிறது.

புதிய மொந்தையில் ஊற்றி வைக்கப்படும் இந்தப் பழைய கள்ளுக்குத் தொட்டுக்கொள்ளும் ஊறுகாய் போல லஞ்சஊழல், தனிநபர் கவர்ச்சி, பொறுக்கி அரசியல், அரசியல் பிழைப்புவாதம் ஆகியவற்றில் ஊறித் திளைத்த என். டி. ராமராவும், கருணாநிதியும் சேர்ந்து கொள்ளப் போகிறார்கள். பற்றாக்குறைக்கு மதவெறி கட்சியான பாரதிய ஜனதாவையோ, ரஷ்ய அடிவருடிகளான போலிக் கம்யூனிஸ்டுகளோ சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இப்படி ஒரு 'தேசிய மாற்றை' உருவாக்குவதன் மூலம் நாட்டில் இரண்டு கட்சி ஆட்சியை ஏற்படுத்தி நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றி உறுதிப்படுத்திவிட முடியும் என்கிற பிரமையை உருவாக்க முயலுகிறார்கள். ஆளும்கட்சியாகட்டும் எதிர்க்கட்சியாகட்டும் அதற்குப் பொதுவான உறுதியான கொள்கைகள்—திட்டங்கள் மற்றும் ஜனநாயக அடிப்படையில் இல்லாதபோது தனிநபர் கவர்ச்சி, தனியார் ஆதிக்கத்தின் மூலமே ஒன்றுபட்டு இருக்க முடியும் என்கிற நிலைமைதான் உள்ளது. ராஜீவுக்கு மாற்று யார்? அடுத்து யாரைப் பிரதமராக அறிவித்து தனிநபர் ஆதிக்கம்—கவர்ச்சியை கட்டி வளர்ப்பது என்கிற பிரச்சினை முக்கியமானதாக இருப்பது இதனால்தான். எனவே பொதுவான, உறுதியான கொள்கைகள், திட்டங்கள் இல்லாது சந்தர்ப்பவாதமாக, பதவியைப் பிடிக்கும் நோக்கத்துடன் கூட்டப்படும் எந்தக் கட்சியும் உருப்பட முடியாது. தனிநபர் கவர்ச்சி ஆதிக்கத்தின் அடிப்படையில் கூட்டப்படுமானால் அது மற்றொரு காங்கிரசு கட்சியாகவே அமையும். தனிநபர் கவர்ச்சி ஆதிக்கம் மங்கும்போது வீழ்ந்துவிடும். இப்படித்தான் உருவாகும் புதிய தேசியமாற்றுக் கூட நாடாளுமன்ற ஜனநாயகத்தை காப்பாற்ற முடியாது.

● குணசேகரன்



# காங்கிரசு கலாச்சாரம்

எங்கெல்லாம் காங்கிரசு கட்சியின் செயற்குழு, ஆய்வுக் குழு கூட்டங்கள் நடக்கிறதோ அங்கெல்லாம் காந்தி குல்லாய் பறக்கிறது; கதர் சட்டை கிழிகிறது; ரத்தம் ஒழுக வன்முறை வெறியுடன் பயங்கர ஆயுதங்களுடன் காங்கிரசின் அகிம்சா மூர்த்திகள் மோதிக் கொள்வதுவாடிக்கையாகிவிட்டது.

கடந்த ஜூன் 30ம்தேதியன்று கடலூரில் இளைஞர் காங்கிரஸ் கமிட்டியின் செயல்பாடு பற்றி ஆராய உட்லண்ட்ஸ் ஓட்டலில் காங்கிரசு இளைஞர் பிரிவு துணைத் தலைவர் புதூர் வேணுகோபால் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏவும் மாவட்ட இளைஞர் காங்கிரசுத் தலைவருமான ஜெயச்சந்திரன் அடங்கிய கும்பலொன்று முகாமிட்டது.

கூட்டத்தில் அதிருப்தி கோஷ்டியினர் புகார் கூறப்போக முதலில் கோஷம் போட்டு அகிம்சா முறையில் தொடங்கிய போராட்டம் பின்னர் கப்—சாசர்கள், நாற்காலிகள் பறக்கும் போராட்டமாக முன்னேறியது. பிறகு சைக்கிள் செயின்களும் இரும்புத் தடிகளுமே அதிருப்தியாளர்களிடம் பேசின. கடலூர் பாரதி வீதியில் அதிருப்தி கோஷ்டி இளைஞர்கள் மண்டை பிளந்து ரத்தம் ஆறாகப் பெருகி உயிருக்கு அஞ்சி ஓடினர். அவர்களைத் துரத்திக் கொண்டு கைகளில் இரும்புத்தடி, சைக்கிள் செயின்களுடன் இன்னொரு கோஷ்டி ஓடியது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைத் தெருவெங்கும் மக்கள் திரண்டு பீதியுடன் ரசித்தனர்.

கோஷ்டி சண்டைகளுக்குத் 'தேசியத் தன்மை' கொடுக்க வேண்டுமென்பதாலோ என்னவோ விதிவிலக்கின்றி இப்போது அகில இந்திய அளவிலும் காங்கிரசு குண்டர்கள் அரங்கேற்றி வருகின்றனர். கடந்த ஜூலை மாத மத்தியில் ஜம்மு—காஷ்மீர் மாநில காங்கிரசுத் தலைவர் கர் கோஷ்டிக்கும், அதிருப்தியாளர்களான இப்டிகார் மௌலவி மற்றும் ரபீக்சாதிக் கோஷ்டிக்கும் அகில இந்திய பொதுச்செயலாளர் கே. என் சிங் முன்னிலையிலேயே உக்கிரமான தெருச்சண்டை நடந்தது. இரும்புத்தடி, சைக்கிள் சையின்களைக் கொண்டு 300க்கும் மேற்பட்ட கர் ஆதரவாளர்களை எதிர்கோஷ்டியினர் சுற்றி வளைத்து நொறுக்கினர்.

அதேபோல, அகில இந்திய பொதுச் செயலாளராகியுள்ள ஜெகன்னாத் பகாடியா முதன்முறையாக ஆந்திராவுக்கு ஜூலை மத்தியில் வந்தபோது கோஷ்டி சண்டை குடுமிபிடி சண்டையாக மாறியது. ஹைதராபாத் நகர காங்கிரசுக் கமிட்டித் தலைவர் ஜனார்த்தனன் ரெட்டி கோஷ்டியும், மத்திய மந்திரி வெங்கல்ராவ் கோஷ்டியும் விமான நிலையத்தில் வரவேற்றபோது கோஷம்போட்டு அடித்துக் கொண்டு வன்முறையில் இறங்கின. விமான நிலைய கண்ணாடிக் கதவுகள் உடைத்து நொறுக்கப்பட்டன. வரவேற்பைக் கண்டு பயந்து போன பகாடியா பத்திரமாக போலீஸ் துணையுடன் உயிர்தப்பி ஓடினார்.

எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தி குளிர்காய்ந்து வந்த காங்கிரசு தலைமை இப்போது பெருகி வரும் கோஷ்டி சண்டைகளைக் கண்டு விழிபிதுங்கி நிற்கிறது. இந்த லட்சணத்தில் இந்தக் கழிசடைகள் 'ஒருமைப்பாடு' பற்றி ஒப்பாரி வைப்பது நல்ல கூத்து!



படிப்பகம்

www.padippakam.com

நமது நாட்டு மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு எப்படித்தான் சாவு வரும் என்றில்லை. எவ்வளவோ வழிகளில் வருகிறது.

கடுங்குளிர், வறட்சி, அனல் காற்று ஆகியவை தாக்கி ஆயிரக்கணக்கானோர் கடந்த மாதங்களில் மாண்டனர். இப்போது நாட்டின் மேற்கு, வடக்கு, கிழக்கு மாநிலங்களில் வெள்ளப் பெருக்கு காரணமாக பலர் பலியாகின்றனர். அதைத் தொடர்ந்து டெல்லியிலும் பீகாரிலும் பரவிய "காலரா" மற்றும் வயிற்று வாயு நோய்கள் நூற்றுக் கணக்கில் காவு கொண்டு வருகின்றன.

ஜூலை மூன்றாவது வாரம். தலைநகர் டெல்லி நகரின் யமுனை ஆற்றுக் கரையில் உள்ள 13 குடியிருப்பு-குடிசைப் பகுதிகள். புதுடில்லியை அழகுபடுத்தும் பாசிச சஞ்சய் காந்தியின் குடிசையிடிப்பு அட்டூழியத்துக்குப் பலியான ஏழை எளிய மக்கள் வாழும் குடிசைப் பகுதிகள். பாசிச ராஜீவின் ஆசீர்வாதத்தோடு காங்கிரஸ் ரௌடிகள் கொலைவெறிக்குப் பலியான சீக்கிய உழைக்கும் மக்கள் வாழும் குடிசைப்பகுதிகள். அங்கு மட்டும் ஒரே வாரத்தில் 10,000 பேருக்கு மேல் காலரா, வயிற்று-வாயு ஆகிய கொடிய வாந்தி பேதி தொற்று நோய் தாக்கியுள்ளது. 130 பேர் மாண்டு போனார்கள். இது அரசு தரும் விவரம். உண்மையில் மேலும் பல நூறு பேரை இத்தொற்று நோய்கள் காவு கொண்டு வருகின்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு கிடையாது. அடி குழாய் கிணறுகளும், திறந்த வெளிக் கிணறுகளுமே உள்ளன. அவற்றைச் சுற்றியும் கழிவு நீரும் சாக்கடையும், குப்பை மேடும் குவிந்து போயுள்ளன. சமீபத்திய திடீர் கன மழை, வெள்ளப் பெருக்கு காரணமாக குடிநீர் மாசுபட்டுப் போய் தொற்று நோய் பரவியது.

தலைநகர் டெல்லியிலேயே இந்த நிலைமை. நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த மாதம் பெய்த பெருமழை—வெள்ளப் பெருக்குக்குப் பிறகு பல மாநிலங்களிலும் தொற்று நோய் தாக்கியுள்ளது. பீகாரில் மட்டும் நூற்றுக் கணக்கானோர் மாண்டுபோய்விட்டனர். தொற்று நோய் தாக்குவதற்கு முன்பாக பெருமழை—வெள்ளம், நிலச்சரிவு பல நூறு பேரை சாகடித்து விட்டன.

கடந்த மூன்றாண்டுகளாக வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த குஜராத் மக்கள் இப்போது பெருமழை—வெள்ளத்துக்கு இரையாகிறார்கள். குஜராத் மாநிலத்திலுள்ள சிறியதும் பெரியதுமான 80 அணைக்கட்டுகள்—நீர்த்தேக்கங்களில் 30 நிரம்பி வழிகின்றன. இதனாலும், அணைக்கட்டுகள் உடையாமலிருக்க வெள்ளம் திறந்து விடுவதாலும் ராஜ்கோட் மாவட்டத்தில் மட்டும் 25 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. பல ஆயிரம் மக்கள் வீடிழந்து வெளியேறி அகதிகளாக அலைகின்றனர். கட்ச் பகுதியில் 24 மீட்டர் உயரமான மித்தி அணை உடைந்து ஏழு கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு — காஷ்மீர், பீகார், அசாம் மற்றும் பிற வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் வெள்ளம் தாக்கியுள்ளது.

பீகாரில் ஒரு நாளைக்கு 40 பேர் விதம் வெள்ளத்துக்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். அசாமில் மட்டும் 18 லட்சம் பேர் வீடிழந்தனர். 4 லட்சம் ஹெக்டேர் நிலம் நீரில்மூழ்கிப் போனது. இதுவரை 254 பேர் பெருமழை வெள்ளத்தினால் செத்துப் போனதாக அரசு கூறுகிறது. தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தவறியது, நிவாரணமளிப்பதைத் தவிர்ப்பது ஆகிய காரணங்களுக்காக பாதிப்புகளை எப்போதும் போல அற்பமாகக் குறைத்துச் சொல்லுகிறது அரசு. சிக்கிம், ஜம்மு காஷ்மீர், பீகார், மேற்கு வங்கம், அசாம் மற்றும் பிற வடகிழக்கிந்திய மாநிலங்களில் நிலச்சரிவு, சாலை—ரயில் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள் துண்டிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வும் அரசு நிர்வாகமும் நிலைகுலைந்து போயுள்ளன. பம்பாய், புனா போன்ற மேற்கு நகரங்களில் தொடர்ந்து அடை மழை, வெள்ளம் காரணமாக பாழடைந்த அடுக்கு வீடுகள் இடிந்து விழுந்து அவற்றில் தஞ்சம் புகுந்திருந்த ஏழை எளிய மக்கள் பலர் மாண்டு போயுள்ளனர். தெற்கு கன்னடா மாவட்டத்திலும் வெள்ளச் சாவுகள் ஏற்பட்டுள்ளன. ஆந்திரா கோதாவரியில் வெள்ள அபாயம் அச்சுறுத்துகிறது.

இந்த வெள்ளப் பேரழிவுக்கு முன்பு கோடையில் வெப்ப-அனல் காற்று வட இந்திய மாநிலங்களில் குறிப்பாக உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் சில நூறு பேரைக் கொன்றது. அதற்கு முன்பு பனிக்கால கடுங்குளிரில் இதே மாநிலங்களில் விரைத்துப் போய் பலர்



# இது... இயற்கையின் சீற்றமல்ல!

படிப்பகம்

மாண்டனர். வெள்ளத்தின்போது கிராமப்புற விவசாயிகளும், தாழ்வான நகரச் சேரிகளில் வாழும் ஏழை எளிய மக்களும் சாவதைப் போலவே, போதிய சுகாதார, மருத்துவ வசதி இல்லாத இவர்களையே தொற்று நோய் தாக்கிக் கொல்வதைப்போல, தகுந்த பாதுகாப்பு வசதி இல்லாத இதே மக்கள் பிரிவினரையே அனல்காற்றும் கடுங்குளிரும் தாக்கிக் கொன்றுள்ளது.

தொடர்ந்து மூன்றாண்டுகளாக வறட்சி—பஞ்சம்—பட்டினிச் சாவுகளால் நாட்டின் பெரும்பான்மையான மாநிலங்கள் வறட்சியில் சிக்கித் தவித்த அதே சமயம் எஞ்சிய பிற மாநிலங்கள் வெள்ளத்தில் சிக்கித் தவித்ததையும் கடந்த சில ஆண்டுகளாகப் பார்க்கிறோம். ஒரிசாவின் கோராபுட், கலகாந்தி, ஆந்திராவின் அதிலாபாத், ராஜஸ்தானின் பார்மெர் ஆகிய மாவட்டங்களில் இருந்து பட்டினிச் சாவுகள் பற்றிய செய்திகள் வந்தன. மற்ற பிற பகுதிகளில் பஞ்சம் வாட்டியது— இன்னும் நீடிக்கிறது.

பட்டினிச் சாவுகள்மட்டுமல்ல; எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டி விஷக் காய்கள், வேர்களைப் பிடுங்கி உண்டும், அழுகிப் போன இறந்த கால்நடைகளின் மாமிசங்களை உண்டு, அந்த ராக்ஸ் என்னும் நோய் கண்டும் மக்கள் மாண்டு போயினர். காட்டுக் கீரைகளையும், மாங்கொட்டைகளையும் இடித்துக் காய்ச்சிக் குடித்தனர். வறுமை - பட்டினியின் கோரம் தாங்காது மனைவி மக்களையும் விற்ற கொடுமையான செய்திகளும் வந்தன.

ஒருநாளைக்கு ஒரு கோடி ரூபாய் செலவு, ஆண்டின் பல நாட்கள் உல்லாசப் பயணம் போகும் பாசிச ராஜீவ் தனது பரிவாரங்களோடு தாழ்த்தப்பட்ட மற்றும் மழைவாழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு 'சுற்றுப்பயணம்' வருகிறார். முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட கிராமங்கள் - மக்களைச் சந்திக்கிறார், நிவாரணப் பணிகளுக்கு உத்திரவிடுகிறார். அதோடு எல்லாவற்றையும் கிடப்பில் போட்டு விட்டு அதிகாரிகளும் பறந்துவிடுகின்றனர்.

வெள்ளம், வறட்சி, புயல், நில அதிர்ச்சி, நிலச் சரிவு, காட்டுத் தீ போன்ற பேரழிவுகளால் உலகில் அதிகமாகப் பாதிக்கப்படும் நாடு இந்தியாவாக உள்ளது. 1960—81 ஆகிய ஆண்டுகளில் வெள்ளத்துக்குப் பலியானவர்களில் 70 சதவிகிதத்தின் இந்தியர்களும் வங்க தேசத்தவரும் ஆகும். கடந்த நாற்பது ஆண்டுகளில் இம்மாதிரியான பேரழிவுகள் அடிக்கடி நிகழ்வதும், அவற்றின் பாதிப்புகளும் அதிகரித்தே வருகின்றன.

இயற்கைப் பேரழிவுகளைக் **கட்டுப்படுத்த முடியாமல்** இருப்பதற்கு இரு முக்கிய காரணங்கள்: போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்து திட்டப் பணிகள் உருப்படியாக மேற்கொள்வதில்லை. இயற்கைப் பேரழிவுகளை விஞ்ஞான முறையில் கண்டறிந்து முன்கூட்டியே தவிர்ப்பதும், பேரழிவுகள் ஏற்பட்டால் உடனடியாக நிவாரணப் பணிகள் மேற்கொள்வதுமில்லை. இன்றைய நவீன அறிவியல் முறைகளைக் கொண்டு வறட்சி-பஞ்சம் தாக்கப்படுவதை ஓராண்டுக்கு முன்பாகவே கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியும். நில மற்றும் நீர்வளத்தை அறிவியல் முறைப்படி பயன்படுத்தாமல் அராஜக முறையில் பயன்படுத்துவதாலேயே வறட்சி பஞ்சம் ஏற்படுகிறது. ஆறுகளுக்குப் பலமான கரைகள், வெள்ள நீர் வடிகால் வசதிகளுடன் கூடிய கட்டுமானப் பணிகள் முற்றாகப் புறக்கணிக்கப் படுவதாலேயே வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வெள்ளப் பெருக்கு பற்றிய கணக்கெடுப்பு, வெள்ளக் கட்டுப்பாடு, நீர் பாசன வசதிகளை மேம்படுத்துவது, தொற்று நோய்த் தடுப்பு ஆகிய பணிகளின் பெயரால் பல கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. அதே சமயம் வறட்சி—பஞ்சம், வெள்ள நிவாரணம் ஆகிய பணிகளின் பெயரால் பல கோடி ரூபாய் திட்ட வகையல்லாமல் ஒதுக்கப்படுகின்றன. ஆனால் இவை அனைத்தையுமே காண்டிராக்ட் புள்ளிகள், அதிகாரிகள், அவர்களுடன்கூட்டுச் சேர்ந்துள்ள ஓட்டுப் பொறுக்கிகள் தின்று ஏப்பம் விடுகிறார்கள்.

அதே சமயம் மக்களின் நலன்களுக்கான அத்தியாவசியப் பணிகளுக்கு ஒதுக்கப்படுவது மொத்த செலவுகளில் மிகவும் குறைவே பிரதமரும் பிற மந்திரிகளும் உல்லாச வாழ்வு நடத்தவும், அரசு இயந்திரத்தை கட்டி இயக்கவும், இராணுவத்துக்கும், அதற்குத் தேவையான ஆயுத தளவாடங்களுக்கும் பன்மடங்கு கொட்டி விரையமாக்கப்படுகிறது. மக்கள் நலனில் துளியும் அக்கறை இல்லாத ஓட்டுப் பொறுக்கிகளின் ஆட்சிமுறை இருக்கும்வரை வறட்சி—பஞ்சம், அனல்காற்று, கடுங்குளிர், வெள்ளம், தொற்று நோய்கள் ஆகிய 'இயற்கை' பேரழிவுகளில் இருந்து மக்கள் தப்ப முடியாது. அறிவியல் வெகுதூரம் வளர்ந்த பிறகும் இயற்கையின் தயவினால் தப்பிப் பிழைக்கும் மக்கள் இந்த அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவர தமது கரங்களில் அரசியல் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

## பலியாகும் விவசாயிகள்

இந்தியாவின் தானியக் களஞ்சியமாகக் கருதப்படும் பஞ்சாப்—அரியானா மாநிலங்களில் பெரும்பாலான பகுதிகளில் ஆழ்குழாய் பாசனம் நடக்கிறது. பாசிச இந்திராவின் பசுமைப் புரட்சி ஏற்படுத்திய மோகத்தின் விளைவாக ஏராளமான ஆழ்குழாய் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அதனாலும் காடு வளர்ப்புத் திட்டத்தின் காரணமாக யூகலிப்டஸ் மரங்கள் ஏராளமாக நடப்படுவதால் அவை நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி விடுவதாலும் நிலத்தடி நீர் மட்டம் கீழே கீழே போகிறது. பஞ்சாப்—அரியானா மாநிலங்களில் ஒருகுறிப்பிட்ட ஆழத்துக்கு குறுகிய கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றின் கீழே 'பம்பு செட்'டுகள் வைத்து அதன் கீழே துளைபோடப்பட்ட ஆழ் கிணறுகளிலிருந்து நீரிறைக்கிறார்கள்.

கன மழை பெய்யும் காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளில் விஷவாயு உற்பத்தியாகி கீழே அடர்த்தியாக பரவி நிற்கிறது. 'பம்ப்செட்'களை முடுக்கி விடுவதற்காக அதன் மேடை வரை கிணறுகளுக்குள் இறங்கும் விவசாயிகள் அந்த விஷவாயு தாக்கி அங்கேயே மாண்டு போகிறார்கள். கடந்த மாதம் 15 நாட்களில் மட்டும் அரியான கர்னால் மாவட்டத்தில் 81 விவசாயிகள் இப்படி மாண்டு போனார்கள்.

அரியானாவில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் செங்கற் சுவர்களால் கட்டப்பட்டவை. பஞ்சாபிலே வெறும் மண் சுவர்கள்தாம். மழைக்காலத்தில் அவற்றுக்குள் இறங்கும்போது சுவர் இடிந்து வேறு சாகிறார்கள். விவசாயிகளின் அரசு என்று பீற்றிக் கொள்ளும் தேவிலால் அரசின் மந்திரிகளோ அதிகாரிகளோ இதுவரை விஷவாயு தாக்கப்பட்ட கிராமங்களுக்குப் போகவும் இல்லை. நிவாரண—மாற்று ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யவுமில்லை.

இப்போது விஷவாயு தாக்கிய கர்னால் மாவட்டத்தில் மட்டும் 80, 000 ஆழ்குழாய் கிணறுகள் வறண்டு போய்விட்டன. மேலும் ஆழப்படுத்தினால் இன்னும் அபாயம் அதிகரிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு அதிர்ச்சி! நிலத்தடி நீர் மட்டம் கீழே கீழே போவதால் பஞ்சாப்—அரியான மாநிலங்கள் பாலைவனமாக, மாறிக் கொண்டிருக்கின்றன. ஐந்து நதிகள் பாயும் பூமியான பஞ்சசீலம் பஞ்ச பூமியாகிக் கொண்டிருக்கிறது!



www.padippakam.com
படிப்பகம்

## ஈழத்தில் ஓராண்டுக்கு மேல் ஆக்கிரமிப்பும் தமிழகத்தில் கவர்னர் ஆட்சி நீட்டிப்பும்

## கனவுகள் பொய்த்த பின்னும் கற்பனை செய்யும் ராஜீவ்கும்பல்

எதிர்பார்த்ததைப் போலவே இரண்டு காரியங்களைச் செய்கிறது பாசிச ராஜீவ் கும்பல். இலங்கை—ஈழ ஆக்கிரமிப்பை ஓராண்டுக்குமேல் நீட்டித்துக் கொண்டேபோகிறது; விடுதலைப் போராளிகளுக்கு எதிரான போரைத் தொடர்கிறது. தமிழ்நாட்டில் கவர்னர் ஆட்சியை மேலும் ஆறுமாதம் நீட்டித்திருக்கிறது. இரண்டு விவகாரங்களில் எதைதைச் செய்யப் போவதில்லை என்று பாசிச ராஜீவ் கும்பல் திரும்பத் திரும்ப புளுகி வந்ததோ அததையே செய்துள்ளது.

தெற்காசியாவில் தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்காக இலங்கை—ஈழ ஆக்கிரமிப்பைத் தொடுத்த பாசிச ராஜீவ் கும்பலின் இராணுவம் ஈழப் புதைசேற்றுக்குள் சிக்கிகொண்டுவிட்டது. அமெரிக்காவுக்கு வியத்நாம் போர் பேரிழப்பையும், பெருந்தோல்வியையும் கொடுத்ததைப் போல ஈழப் போர் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு அமையும் என்று சில முதலாளித்துவ அரசியல் கணிப்பாளர்களே கூடக் கூறினர்.

பாசிச ராஜீவ் கும்பல் மறுத்தது. “ஈழ நடவடிக்கை வியத்நாம் போரைப் போன்றதல்ல. அப்படிச் சொல்வது ஈழ நடவடிக்கையை மட்டுமல்ல; வியத்நாம் போரையும் பற்றிய அறியாமைதான்!” என்று ஆணவமாகக் கேலி செய்தது. ஆனால் பாசிச ராஜீவ் கும்பலுக்குத் தெரியும். தெற்கு ஆசியாவில் இந்தியாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்திய இராணுவம் இலங்கையில் நீண்டகாலம், முடிந்தால்—தேவையானால் நிரந்தரமாக ஊன்றி நிற்பது அவசியம் என்றுகூட பாசிச ராஜீவ் கும்பல் விரும்புகிறது. அந்த நோக்கம்—அடிப்படையிலேதான் பாசிசஜெயவர்த்தனே கும்பலுடன் ஒப்பந்தம் போட்டது.

ஆனால் பாசிச ராஜீவின்அதிநவீன—அதிரடி உளவுப் படைகளின்அறிக்கைகள்,‘கம்ப்யூட்டர்’ கணிப்புகள் தவறாகப் போய்விட்டன. அதன் கனவுகள் பொய்த்து போய்விட்டன. புலிகள் உட்பட எல்லா விடுதலைப் போராளிகளையும் விலைக்கு வாங்கிவிடமுடியும், மிரட்டி பணிய வைத்துவிட முடியும் என்று நம்பியது. விடுதலைப் போராளிகளின் படைபலம்—மக்கள் ஆதரவை அற்பமாக எண்ணியது. ஈழ மக்களின் விடுதலை—சுதந்திர உணர்வை மதிக்கத் தவறியது.

ஆதிக்க நலன்களுக்காக கணிசமான அளவு இழப்புகளை எதிர்பார்த்து ஏற்கவும் தயாராய் இருந்தது. ஆனால் கடந்தஓராண்டில் சந்தித்த அளவு இழப்பு [illegible]லை.

கடந்த 10 மாதங்கள் நடந்த ஈழப் போரில் 1200 போராளிகளைக் கொன்றதாகவும், 1500 பேரைச் சிறைப் பிடித்ததாகவும், 1700 சிவிலியன்கள் இறந்ததாகவும், 550 இந்திய இராணுவத்தினர் மாண்டதாகவும், 1400 பேர் காயமடைந்ததாகவும், 100கோடி ரூபாய் செலவானதாகவும் பாசிச ராஜீவ் கும்பல் ஒப்புக் கொள்கிறது. உண்மையைப் புரட்டிச் சொல்கிறது என்பது யாவரும் அறிந்ததே!

ஏறக்குறைய 250 போராளிகள் தியாகிகளானதாகவும், 2000த்துக்கு மேலான இந்திய இராணுவத்தினர் பலி கொடுக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். ஆறு மாதங்களுக்கு முன்பே 700 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஜெயவர்த்தனே சொன்னார். ஏறக்குறைய 1500 கோடி ரூபாய் அளவு இந்திய அரசு இழந்திருக்கிறது என்பதுதான் உண்மை!

பாசிச ராஜீவ் கும்பலின் பிராந்திய ஆதிக்கத் திட்டத்தின் முதற் அடிஎடுத்து வைத்தபோதே கேலிக்குரிய முறையில் தோல்வியுற்றது. பாசிஸ்டுகள் ஒருபோதும் தமது தோல்விகளை ஒப்புக்கொள்வதில்லை. உண்மை அவர்களது முகத்தில் அறைந்த போதும் கண்ணை மூடிக் கொள்கிறார்கள்.

பாசிச ராஜீவ் கும்பலும் அப்படித்தான். அரசியல், அரசு தந்திரம், இராணுவம் ஆகிய மூன்று துறைகளிலும் அது கண்ட தோல்விகளை மூடி மறைப்பதற்குத் தொடர்ந்து முயலுகிறது.

ஒருபுறம் விடுதலைப்போராளிகளைத் தேடி அழிப்பதையும், ஈழத் தமிழ்மக்களைப்படுகொலை, சித்திரவதை, கற்பழிப்பு செய்வதையும் தொடரும் அதே சமயம் மறுபடியும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் ஒப்பந்தம் — சமாதானம் — தேர்தல் வந்துவிடும் என்றும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது, பாசிச ராஜீவ் கும்பல். இராணுவ ஒடுக்குமுறை அல்லது விலை கொடுத்து விடுதலைப் போராளிகளை வாங்குவது ஆகிய கயமைத்தனமான வழிகளைத் தவிர வேறு நியாயமான தீர்வை பாசிச கும்பல் ஒருபோதும் மேற்கொள்ளாது.

பிரபாகரன் தலைமையிலான புலிப் படையினர்கூட இரட்டை “நாடகம்” ஆடுவதாகத்தெரிகிறது. இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்துக்கு எதிராக போரையும் அதே சமயம் அதன் உளவுப்படையான “ரா”வுடன் ரகசிய பேரத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறது. அது எதிர்பார்க்கும் விலையும். அதிகாரச் சலுகைகளும் கிடைக்கும் பட்சத்தில் ஈழ மக்களின் சுதந்திரத்தையும் விடுதலையையும் அடகு வைத்துவிடும் அபாயம் உள்ளது.




போராளிகளை ஒடுக்கப்போன கூலிப்படையினர் ஊனமுற்றுத் திரும்புகின்றனர். இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு போராளிகள் தரும் பாடம் இதுதான்! இது தொடரும்....



www.padippakam.com
படிப்பகம்

இலங்கை—ஈழப் பிரச்சினையில் தனக்கு சாதகமானதொரு நிலைமை ஏற்படும்வரை தமிழ்நாட்டில் தேர்தலை நடத்துவதில்லை. ஆளும் ஆட்சியை நீட்டிப்பது என்பதுதான் பாசிச ராஜீவ் கும்பலின் முடிவு. இந்தியாவின் ஈழப்போரில், தமிழ்நாட்டின் அரசியலும் பின்னிப்பிணைந்தவை என்று அது கருதுகிறது. ஈழப் போரைத் தொடர்வதற்கு சாதகமான—ஆதரவான ஆட்சி தமிழ்நாட்டில் இருக்கவேண்டும். காங்கிரசு ஆட்சி அமையாது என்பது அது நன்றாகவே அறிந்துள்ளது. ஆனாலும் பாசிச எம்ஜிஆர் போன்றதொரு பாதந்தாங்கி அவசியமாகஉள்ளது.

''தமிழ்நாட்டில் காங்கிரசு பலம் அடைந்து, ஆட்சியைப் பிடிக்கும் நிலை உருவாகும்வரை ஆளுநர் ஆட்சியை நீட்டிக்கிறது; அதனால்தான் தேர்தல் நடத்த மறுக்கிறது'' என்று பிற ஓட்டுக் கட்சிகள் கூறுவது விவகாரத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்ப்பதாகும். ஈழப்போரைக்கவனத்தில் வைத்துத்தான் பாசிச ராஜீவ் கும்பலின் நம்பகமான விசுவாசி அலெக்சாண்டரை கவர்னராகக் கொண்டு வந்து போட்டுள்ளது என்று நியமனத்தின் போதே நாம் சொன்னோம். போராளிகளை விலைக்கு வாங்கியோ, துப்பாக்கி முனையிலோ ஈழத்தில் மாநிலத் தேர்தலை நடத்தி விட்டுத்தான் தமிழகத் தேர்தலை பாசிச ராஜீவ் கும்பல் சந்திக்கத் துணியும்.

கவர்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, தேர்தல் நடத்துவதன் மூலம் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதாக மற்ற பிற எதிர்க்கட்சிகள் பிரமைகளை உருவாக்குகின்றன. எந்த ஓட்டுக்கட்சியின் ஆட்சியானாலும் பாசிச எம்ஜிஆரின் பாதையிலேதான் அது அமையும்—அது வேறு விஷயம். ஆனால் நாடாளுமன்ற ஜனநாயக உரிமைகளைக் கூட காலில்போட்டு மிதிக்கும் வகையில் நெருக்கடிகள் முற்றி உள்ளன. ஆளுவதற்கும் அடக்குவதற்குமான நியாய உரிமை பெறும் தேர்தல் முறையைக்கூட அனுமதிக்க மறுக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

ஓட்டுக் கட்சிகள் தேர்தல்—பதவிகளைக் கைப்பற்றுவதில் மட்டுமே குறியாக உள்ளன. எனவேதான் தமிழகத் தேர்தலும் ஈழப் போரையும் பிரித்தே பார்க்கின்றனர். ஆனால் ஈழத்தமிழ் மக்களும், இந்தியத் தமிழ் மக்களும் பாசிச ராஜீவ் கும்பலின் எத்தணிப்புகளை எதிர்த்து முறியடித்திடவேண்டும். கவர்னர் ஆட்சி என்பது அறிவிக்கப்படாத ஒரு அவசரநிலை ஆட்சிஎன்பதை அறிந்து எதிர்த்திடவேண்டும். உடனடியாக ஈழப்போர் நிறுத்தம் படைகளைத் திரும்பப் பெறுவது என்கிற முன் நிபந்தனையின் அடிப்படையிலான பகிரங்கமான பேச்சுவார்த்தை நடத்தும்படி விடுதலைப் போராளிகளை நிர்பந்திக்கவேண்டும். இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவதற்கான விடுதலைப்போரை உறுதியாகத் தொடரவேண்டும்!

● மாணிக்கவாசகம்


# வரிப் பணத்தை வாரியிறைத்து வாண வேடிக்கை!

**க**டந்த ஜூலை 13 அன்று மீண்டும் ஒரு செயற்கோள் 23 கோடி ரூபாயை விழுங்கிவிட்டு புறப்பட்ட வேகத்திலேயே புஸ்வாணமாகி கடலில் விழுந்தது.

காட்டுவதற்கு கஜனி முகமதுவின் கதை இருப்பதால் கவலையில்லாமல், 'தோல்வியே வெற்றிக்கு அடித்தளம்! தொடர்ந்து சுயசார்புடன் முயற்சி செய்யுங்கள்' என்று பத்திரிக்கைகள் ஆறுதல் கூறி நம்பிக்கை யூட்டின. ஆனால் ஆறுதல் கூறுவதற்கு இது முதல் தோல்வியல்ல. பாசிச அன்னை இந்திரா காலத்திலிருந்தே விஞ்ஞான ரீதியில் படுதோல்வியடைந்த திட்டம்தான்! ஏன், கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள் ராஜீவ் கண்ணெதிரிலேயே புஸ்வாணமாகி விழுந்தது.

ஆனாலும் மீசையில் மண் ஒட்டவில்லையென்று அடுத்த பத்தாவது நாளில் 'இன்சாட்' செயற்கைக் கோளை தென்னமெரிக்காவின் கோரு தீவிலிருந்து ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி உதவியுடன் வெற்றிகரமாக செலுத்தியதைக் குறிப்பிட்டு பெருமையில் பூரித்துப் போகிறார்கள். பிரதமரும் பத்திரிக்கைகளும் இந்திய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துக்களைக் குவிக்கிறார்கள்.

ஆனால் இந்த செயற்கைக் கோள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஃபோர்டு விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் 180 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டு, அதன் உதவியுடன்தான் விண்ணில் ஏவப்பட்டது. கர்நாடகத்தின் ஹசனிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் ஃபோர்டு நிறுவனத்தின் விஞ்ஞானிகள் உடனிருந்து அதை இயக்குகின்றனர். இந்த லட்சணத்தில் இந்திய விஞ்ஞானிகள் பொத்தானை அழுத்தி 24 நிமிடங்கள்போராடிசெயற்கைக் கோளின் 'ஆண்டெனா'வை விரியச் செய்ததாக பெருமையில் வீங்கிப் போகிறார்கள்.



அன்னிய சீர்குலைவு சக்திகளை முறியடிப்போம் என்று பாசிச ராஜீவ் கும்பல் முழங்கிக் கொண்டிருக்கும் போதே, இன்சாட் செயற்கைகோள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு, அதன் விஞ்ஞானிகள் இந்தியாவிலிருந்து கொண்டுஅதை இயக்குகிறார்கள். இனி மறைப்பதற்கு எந்த ரகசியமுமில்லை என்ற அளவுக்கு விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்துவிட்டது பாசிச கும்பல்.

இன்சாட் செயற்கைக் கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டு தகவல் தொடர்புத் துறையில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும் வகையில் சாதனை புரிந்துள்ளது என்று பாசிஸ்டுகள் பீற்றிக் கொண்டாலும் பாழாவது நமது வரிப்பணம் தான்.

ஏகாதிபத்திய நாடுகளே விண்வெளி ஆராய்ச்சிப் பணிகளுக்குச்செலவிடத் தயங்கும் வறுமையில் சிக்கித் தவிக்கும்போது, இந்தியாவை வல்லரசாக மாற்றி அண்டை நாடுகளை அச்சுறுத்தவும், வீண் ஜம்பத்திற்கும் தற்பெருமைக்கும் பாசிச கும்பல் நமது வரிப்பணத்தை வாரியிறைத்து வாண வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறது. வறுமையிலும் பெருமை தேடுவதாகக் காட்டி மக்களை ஏய்க்கும் பாசிச கும்பலின் எத்தணிப்புகளை விழிப்புடனிருந்து முறியடிக்கவேண்டும்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசு கொள்ளையர்களின் பயங்கரவாதம்

கொலை! படுகொலை! பச்சிளம் குழந்தை என்றும் பாராமல் இரக்கமில்லாமல் நடந்த கோரக் கொலை; பழிக்குப் பழி வாங்கும் வெறியோடு நடந்த கொடூரமான கொலை!

பீகாரின் ஜெகனாபாத் மாவட்டம் நுன்கி, நாக்வான் எனுமிரு கிராமங்களில்தான் கடந்த ஜூன் மாதம் 16ம் நாளன்று நள்ளிரவில் இக்கோரமான பயங்கரம் நடந்தேறியது. கொலைகாரர்கள் ஏற்கனவே தீர்மானித்தபடி குறிப்பிட்ட சில குடும்பத்தினரை துடிக்கத் துடிக்க சுட்டுக் கொன்றனர். ஒருவரல்ல; இருவரல்ல! 6 மாத பச்சிளம் குழந்தை, 6 வயது சிறுவன் உட்பட மொத்தம் 19 பேர் கொல்லப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட அனைவருமே 'தாழ்த்தப்பட்ட' கூலிவிவசாயிகள்!

இக்கோரமான படுகொலையைச் செய்த கொலை வெறியர்கள் யார் என்று புரியாத நிலையில் அரசும் பத்திரிக்கைகளும் திட்டமிட்டே ஒரு கட்டுக் கதையை உருவாக்கி பழியை நக்சல்பாரிப் புரட்சியாளர்கள்மீது சுமத்தி அவதூறு செய்தன. நக்சல்பாரி குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக இருதரப்பினரும் ஒருவரையொருவர் பழி வாங்கும் முயற்சியில் இறங்கியதன் விளைவுதான் இக்கோரக் கொலை என்று அரசு அவிழ்த்து விட்ட புளுகு மூட்டையை வடநாட்டுப் பத்திரிக்கைகள் வக்கணையாக வாந்தி எடுத்தன.

"நக்சல்பாரி குழுக்களில் ஒன்றான வினோத் மிஸ்ரா குழுவின் வெகுஜன அமைப்பான இந்திய மக்கள் முன்னணிக்கும் (IPF) ஆர்வாலில் விவசாயிகளைத் திரட்டிப் போராடிய மஸ்தூர் கிசான் சங்கராம் சமிதிக்கும் (MKSS) இடையே நீண்ட நாட்களாக தகராறு நீடித்து வந்தது. அதன் உச்சகட்டமாக இந்திய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களான இக்கூலி விவசாயிகளை மஸ்தூர் கிசான் சங்கராம் சமிதியினர் சுட்டுக் கொன்றுள்ளனர்" என்று புளுகினர் ஒரு தரப்பினர். 'இல்லை இல்லை! கட்சி ஐக்கியக்குழு என்ற மார்க்சிய லெனினியக் குழுவுக்கும் இந்திய மக்கள் முன்னணிக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவுதான் இப்படுகொலை' என்று கயிறு திரித்தனர் மற்றொரு தரப்பினர்.

எல்லாவற்றுக்கும் மேலாக பீகாரின் காங்கிரசு எம்.பி.யான மகேந்திர பிரசாத், "நான் ஜெகனாபாத்தில் பிறந்தவன்; அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை நன்கறிந்தவன்" என்ற பீடிகையோடு நக்சல்பாரி புரட்சியாளர்கள்மீது அவதூறு சேற்றை வாரி இறைத்து 'வீக்லி' பத்திரிக்கைக்கு 'மனந்திறந்து' ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார்.

இந்தக் கட்டுக் கதைகள் அனைத்தும் பொய் என்றும், கொலைகாரர்கள் யார் என்பதையும் சம்பந்தப்பட்ட அமைப்புகளே இப்போது அம்பலப்படுத்தியுள்ளன.

"பீகாரின் விவசாயப் போராட்டங்களை ஒடுக்குவதற்காக சாதி வெறிபிடித்த நிலப்பிரபுக்களும் காங்கிரசு தலைவர்களும் கொள்ளையர்களை ஏவி விடுவது யாவரும் அறிந்த உண்மை. நிலப்பிரபுக்கள் தத்தமது சாதிக்கேற்ப பூமிசேனா, பிரம்கர்ஷி சேனா, லோரிக்சேனா என்று பல வகைப்பட்ட தனி வகைகுண்டர்படைகளை நிறுவிக் கொண்டு போராடும் விவசாயிகளை கொன்றொழித்து வருகின்றனர். கன்சாரா, பிப்ரா பரஸ்பி காவில் தாழ்த்தப்பட்ட மக்கள் இத்தகைய சாதிவெறியர்களின் சேனைகளாலும், கொள்ளைக் கூட்டத்தினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ராமாஸ்ரே யாதவ் என்ற வலது கம்யூனிஸ்ட் எம்.பி. லோரிக் சேனா என்ற குண்டர்படையை ஊட்டி வளர்க்கிறார். ராம்லட்சுமண்சிங் யாதவ் என்கிற காங்கிரஸ் தலைவர், அரேராம், ராஜாஜாதவ், ராமானந்த் ஜாதவ் முதலானோரைத் தலைவர்களாகக் கொண்ட கொள்ளையர் கூட்டத்தை வெளிப் படையாக ஆதரித்து இயக்குகிறார்.

"நுன்கி, நாக்வான் கிராமங்களில் நடந்த படுகொலையை அரேராம் தலைமையிலான கொள்ளையர் கூட்டம்தான் முன்னின்று நடத்தியுள்ளது. சாதி வெறி பிடித்த நிலப்பிரபுக்களின் குண்டர்படைக்கு எதிராகவும், கொள்ளையர் கும்பலுக்கு எதிராகவும் உறுதியாகப் போராடும் விவசாய இயக்கங்களின்மீது இது போல பலமுறை தாக்குதல் நடந்துள்ளது. விவசாயிகளின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பளிக்க வக்கற்ற அரசு, கொலைகாரர்களைப் பாதுகாப்பதோடு நக்சல்பாரி புரட்சியாளர்கள் மீதும் கீழ்தரமாக அவதூறு செய்து வருகிறது. இத்தகைய அவதூறுகளாலும் அடக்குமுறைகளாலும் நக்சல்பாரி புரட்சியாளர்களையும் அவர்களின் தலைமையிலான விவசாய இயக்கங்களையும் ஒரு போதும் நசுக்கிவிட முடியாது" என்று கட்சி ஐக்கியம், விடுதலைக் குழு, மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் மையம் முதலான நக்சல்பாரிக் குழுக்களும், மஸ்தூர் கிசான் சங்கராம் சமிதியும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

தென்னாப்பிரிக்க போத்தாவின் நிறவெறிக் காட்டுமிராண்டித்தனத்தைவிடக் கேவலமாக பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டு, பழியை நக்சல்பாரி புரட்சியாளர்கள்மீது போட்டு விட்டு பீகாரின் புதிய முதல்வர் பகவத்ஜா ஆசாத் இப்போது பங்காரு பண்டாரத்தின் ஆன்மீக யாகத்தில் முக்கிய புள்ளியாகக் கலந்து கொண்டு புண்ணியம் தேடுகிறார். ஆனால் "நாங்கள் இதை மறந்து விடுவோம் என்று எதிர்பாராதே கிழட்டு ஜென்மமே! நான் இல்லாவிட்டால் வேறொருவன்; உன்னிடமில்லாவிட்டால் உன் குழந்தைகளிடம் இந்த அவமானத்திற்காக வஞ்சம் தீர்த்துக் கொள்வோம். அது மட்டும் ஞாபகமிருக்கட்டும். எங்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள் பிசாசுகளே!" என்று வெஞ்சினத்தை நெஞ்சில் ஏந்தி சூளுரைத்துக் கொண்டிருக்கிறார்கள் நக்சல்பாரிகளின் தலைமையில் திரண்டு போராடும் பீகார் விவசாயிகள்.

● குமார்







படிப்பகம்

www.padippakam.com

# ஆட்குறைப்பு சதிக்கு எதிராக ஆர்த்தெழும் தொழிலாளர்கள்



ராஜீவின் புதிய கொள்கைகள் அனைத்தும் புதை குழிக்குப் போனதையடுத்து, நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் தரகுப் பெரு முதலாளிகள் அதன் சுமை முழுவதையும் தொழிலாளி வர்க்கத்தின் மீதே சுமத்தி வருகின்றனர். ஆலை மூடல், ஆட்குறைப்பு, வேலைப்பளு முதலான முதலாளிகளின் புதிய தாக்குதல்களால் தொழிலாளிகள் வீதியில் வீசியெறியப்பட்டு வருகின்றனர். இதை மீண்டும் நிருபிக்கும் வகையில் 'ஏஷியாடிக் ஆக்ஸிஜன்லிமிடெட்' ஆலைத் தொழிலாளிகள் வேலையிழந்து பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் மிகப் பெரிய தரகு முதலாளிகளின் வரிசையில் 13-வது இடத்தில் இருப்பது ஜலான் குடும்பம். இம் முதலாளிகள் 1963-ல் சென்னை அம்பத்தூரில் இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட் என்ற ஆலையைத் துவக்கினர். காற்றிலிருந்து ஆக்ஸிஜன் வாயுவைப் பிரித்து சிலிண்டர்களில் அடைக்கும் இந்த ஆலைக்கு எவ்வித மூலப் பொருட்களும் தேவையில்லை. தூய்மையான வெளிக்காற்று கிடைக்கூடிய சுற்றுப்புற சூழநிலைகள் இருந்தாலே போதுமானது. இப்படி எவ்வித மூலப்பொருள் செலவுமின்றி ஒரு சில இயந்திரங்களை மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், தொழிலாளிகளின் உழைப்பைக் கொள்ளையடித்து அதிலிருந்து கிடைத்த லாபத்தைக் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்குள் 1967-ல் அரக்கோணத்தில் ஏஷியாடிக் ஆக்ஸிஜன் லிமிடெட் என்ற ஆலையை ஆரம்பித்தது. வெள்ளமாக லாபம் பெரிகியதும் திருச்சி அருகே துவாக்குடி மலையில் இன்னுமொரு ஆலையைத் துவக்கியது.

இம் மூன்று ஆலைகளிலிருந்து கிடைத்த பெருளவு லாபத்தைக் கொண்டும், இன்னும் ஏ.இ.பி.எல் என்ற பெயரில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பினாமி வெடி மருந்து கம்பெனி மூலம் கிடைத்த லாபத்தைக் கொண்டும் ராணிப்பேட்டையில் அதிக திறன் கொண்ட பெரிய ஆலையை இம் முதலாளிகள் நிறுவினர்.

மலையளவு லாபத்தை இந் நிறுவனத்துக்கு ஈட்டித் தரும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்கள், தங்கள் வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய ஊதிய உயர்வு கோரி பல முறை போராடியும்கூட, பேச்சு வார்த்தை என்றபெயரில் வழக்கம் போலவே இழுத்தடித்து வந்தது நிர்வாகம். இப்போது அரக்கோணம் ஆலை நட்டத்தில் இயங்குவதாகக் கூறி அதை மூடிவிட்டு அங்குள்ள தொழிலாளர்களை புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ராணிப்பேட்டை ஆலைக்கு எடுத்துக் கொள்வதாக (இடமாற்றம் செய்வதாக) தொழிசங்கங்களுடன் கலந்து பேசி ஒப்புக் கொண்டது நிர்வாகம்.

ஆனால் கடந்த மார்ச் மாதத்தில் நிர்வாகம், மூன்று ஆலைகளிலும் உள்ள மொத்த தொழிலாளர்களான 236 பேரில் 38 பேர் போகமீதமுள்ள 198 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதாக திடீரென நோட்டீசு கொடுத்தது. தங்களை ஒட்டச் சுரண்டியது மட்டுமின்றி இப்போது தங்களை ஓட்டாண்டிகளாக்கிய நிர்வாகத்தின் திமிர்த்தனத்தை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். உண்ணாவிரதம் போன்ற கையாலாகாத போராட்டதில் ஆரம்பித்து பின்னர் உள்ளிருப்பு போராட்டத்தில் இறங்கி, இன்றுவரை உறுதியாக நடத்தி வருகின்றனர். இதற்கிடையே நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்குமிடையே 6 முறை சென்னையில் பேச்சு வார்த்தை நடந்தது. தொழிலாளர் நல அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்ட நிர்வாகம் ஆட்குறைப்பைத் தவிர வேறு வழியில்லை என்று கையை விரித்து விட்டது. ஆனால் தொழிலாளர்கள் கடந்த நான்கு மாத காலமாக விடப்பிடியாகப் போராடி வருகிறார்கள். போராட்டத்தை சீர்குலைக்கும் நோக்கத்தோடு நிர்வாகம் கடந்த ஜுன் மாதத்தில் தொழிற்சங்க தலைவர்கள் உட்பட தொழிலாளர்களில் சிலருக்கு நன்கொடைக் காசோலைகளை தபால் மூலம் அனுப்பி வைத்தது. வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் அதைப் புறக்கணித்து நாலாந்தர வேலை செய்யும் நிர்வாகத்தின் முகத்தில் காறி உமிழ்ந்தனர். மேலும் ஆலையிலுள்ள இயந்திரங்களை நிர்வாகம் அப்புறப்படுத்தி விட்டு கதவடைப்பு செய்யும் என்பதால் தொழிலாளிகள் ஆலை வளாகத்திலே சாப்பிட்டுக் கொண்டு அங்கேயே தங்கியிருக்கின்றனர்.

உறுதியாகப் போராடிவரும் தொழிலாளிகளே, உங்கள் போராட்டம் தொழிலாளர் விரோத பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிரான அரசியல் உறுதியும் புரட்சிகர லட்சியத்தில் பிடிப்பும் கொண்டதாக முன்னேற வேண்டும். அப்போதுதான் முதலாளிகளின் இப்புதிய தாக்குதல்களை முறியடிக்க முடியும். மேலும் உங்களுக்குத் தலைமை தாங்கும் போலிக் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத் தலைமை, நிர்வாகத்திடம் இன்னும் ஒரு சிலருக்கு வேலை தரக் கோரி போராட்டத்தை சந்தர்ப்பவாதத்துக்கு இழுத்துச் செல்லும் அபாயம் நிலவுகிறது. உறுதியாகப் போராடி வரும் நீங்கள் விழிப்புடன் இருந்து இதை முறியடிக்கவேண்டும் ஓங்குக தொழிலாளர் போராட்டம்!

தகவல்:
விஜய்பாஸ்கர், திருச்சி.

---

**வெளிவந்துவிட்டது!**

**கட்சி நிறுவனக் கோட்பாடுகள்**

— தோழர் லெனினது வழிகாட்டுதலின்கீழ் எழுதப்பட்டு 1921ல் பொதுவுடமை அகிலத்தின் மூன்றாவது பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஆவணம்.

— புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியின் அமைப்புத்துறை கோட்பாடுகளை வரையறுத்துத் தரும் பெட்டகம்.

**புதிய ஜனநாயகம் வெளியீடு**

விலை ரூ. 4
தபால் செலவு ரூ. 1

நூலைத் தபாலில் பெற விரும்புவோர் ரூ.5 மதிப்புடைய தபால் தலைகளை அனுப்புக.



படிப்பகம்

www.padippakam.com

# நவீன நக்கீரனாக நம்பூதிரிபாடு

ஏகாதிபத்திய நாடுகளில் 'சுதந்திரம்', 'ஜனநாயகம்' என்பதெல்லாம் பண முதலைகளுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும்தான் என்றிருக்கும்போது, ஏகாதிபத்திய நாடானரசியாவில் 'ஜனநாயகம்' 'இரும்புத் திரை விலக்கப்படுகிறது' என்றால் அங்கே புரட்சியா பூத்து குலுங்கப் போகிறது? அதெல்லாம் ஒன்றுமில்லை. ரசியாவின் புதிய ஜார்களான குருச்சேவ்—பிரஷ்னேவ் கும்பல் சோசலிசத்தைச் சிதைத்து மீண்டும் முதலாளித்துவத்தை உயிர்ப்பித்ததை தொடர்ந்து, இன்று அதிகாரத்திலுள்ள கோர்ப்பசேவ் கும்பல் தனது 'கிளாஸ் நாஸ்ட்'—'பிரஸ்டோரிகா' கொள்கைகளால் இன்னும் ஒருபடி முன்தள்ளியதன்மூலம் முதலாளித்துவ சக்திகளும் அஞ்ஞானவர்த—மதவாத சக்திகளும் சுதந்திரமாக ஆட்டம் போடுகின்றன.

இத்தனை நாளும் மூடிக் கிடந்தது போய் இன்று, 20,000 சர்ச்சுகளும், மதப் பாட சாலைகளும் புத்துயிர் பெற்றுள்ளன. மதவாதிகள் கோர்ப்பச்சேவின் மதச் சுதந்திரக் கொள்கையை வாழ்த்தி வரவேற்கின்றனர். பாழடைந்து கிடந்த கோயில்கள் செப்பனிடப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. திருமணங்கள்கூட இப்போது பாதிரிமார்களின் தலைமையில் மாதா கோயில்களில் நடைபெறுமளவுக்கு இளைய தலைமுறையினரிடம் மத நம்பிக்கை பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் கோர்ப்பசேவின் தாயார் தீவிரமான யேசு பக்தராம். இன்றும்கூட அவர் தினமும் கோயிலுக்குப் போய் வருகிறாராம்!

மதத்துக்கும் அரசுக்கும் இடையேயான உறவை அறுத்தெறிய வேண்டும் என்ற மார்க்சிய போதனைக்கு கோர்ப்பசேவின் ஜனநாயக ஆட்சியில் இடமில்லை. இன்று ரசியாவில் பைபிள், குரான் மற்றும் பிற வழிபாட்டு நூல்களை அச்சிட்டு பதிப்பிக்க அரசாங்கமே இலவசமாக காகிதம் கொடுத்து உதவுகிறது. 20 பேருக்கு மேற்பட்ட பக்த கோஷ்டியொன்று ஒரு மாதா கோயிலைக் கட்டித் தரக் கோரினால் அரசு இலவசமாகக் கட்டித் தருகிறது. இதோடு மத நிறுவனங்களின் வருமானங்களுக்கு வரியில்லை என்றும் கோர்ப்பசேவ் அறிவித்துள்ளார். அப்புறம்என்ன, கோர்ப்பசேவின் ஜனநாயக ஆட்சியில் மதவாதிகளுக்குக் கொண்டாட்டம்தான்!

மதவாத சக்திகளே கொண்டாட்டமாக இருக்கும்போது எதிர் புரட்சி முதலாளித்துவ சக்திகளை பற்றி சொல்லவா வேண்டும்? கோர்ப்பசேவின் கிளாஸ் நாஸ்ட்—பிரஸ்டோரிகா கொள்கை அறிவிப்பு வந்த குறுகியகாலத்திற்குள்ளாகவே தங்கள் நோக்கங்களை சாதித்து விட்டார்கள். ரசியாவை குருபீடமாகக் கொண்டுள்ள போலிக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மைதிலி சிவராமன்கள் இங்கே 'அழகிப் போட்டி' நடத்துவதற்கு எதிராக மாதர் சங்கத்தைத் திரட்டி கண்டனம் தெரிவித்துக் கொண்டிருக்கும் போது அங்கே ரசியாவில் இன்று ஒட்டுத் துணியுடன் 'அழகிப் போட்டிகள்' கோலாகலமாக அரங்கேறி வருகின்றன.

காந்தியிலிருந்துஇந்திராவரை அனைவருக்கும் சிலை எடுத்து இந்திய—ரசிய நட்புறவை வளர்ப்பதாகக் கூறிய ரசியாவின் புதிய ஜார்கள் இன்று வெளிப்படையாக பாசிசராஜீவை முற்போக்குஎன்று புகழாரம் சூட்டத் தொடங்கிவிட்டனர்.

இனியும் ரசியாவை சோசலிச நாடு என்று நியாயப்படுத்த முடியாத நிலையில் இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் தேள் கொட்டிய திருடனாகத் தவிக்கிறார்கள். எனவே வழக்கம் போலவே அணிகளையும் மக்களையும் ஏய்ப்பதற்காக திருவாளர் நம்பூதிரிபாடு நவீன நக்கீரனாக அவதாரம் எடுத்து, ரசியா ராஜீவை ஆதரிப்பது முற்றிலும் தவறு என்று பகிரங்கமாக குற்றம் சாட்டக் கிளம்பி விட்டார். ''நாங்கள் ரஷியாவை மரியாதையுடன் மதிக்கிறோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டத்தை நாங்கள் ஆராய்கிறோம்; கற்கிறோம். ஆனால் நாங்கள் எங்கள் மூளையை யாருக்கும் அடகு வைக்க விரும்பவில்லை. ராஜீவுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை நாங்கள் ஒரு போதும் பலவீனப்படுத்த மாட்டோம்'' என்று எகிறிக் குதிக்கிறார்.

அது சரி, மூளையை எதற்காக அடகு வைக்க வேண்டும்? நம்பூதிரிபாடின் மூளையே ரசியத் திருத்தல்வாதிகளின் போலிக் கம்யூனிசப் பட்டறையில் உருவாக்கம் பட்டதுதானே? அதிருக்கட்டும்! ராஜீவுக்கு எதிரான போராட்டங்களை ஒருபோதும் பலவீனப் படுத்த மாட்டோம் என்கிறாரே, அதுவே சந்தர்ப்பவாதமானது. ஏனெனில் முதுகெலும்பில்லாத சாதாரண எதிர்க் கட்சிகள்கூட ராஜீவின் கண்ணில் விரலை விட்டு ஆட்டுமளவுக்கு பாசிச ராஜீவ் கும்பல் முற்றாக அம்பலப் பட்டு மக்களிடமிருந்து தனிமைப் பட்டுக் கிடக்கிறது. இந்த நேரத்தில் ரசிய எஜமானர்களுக்கு இசைவாக ராஜீவுக்கு 'விமர்சன பூர்வமான ஆதரவு தருவதாக நாடகமாடினால்கூட அது போலிக் கம்யூனிஸ்டுகளை கையாலாகாதவர்களாகக் காட்டிக் கொடுத்துவிடும். எனவேதான் மக்களது ராஜீவ் எதிர்ப்பலையுடன் புல்லுருவியாக ஒட்டிக் கொண்டு நாடகமாடுகின்றனர்.

இன்னுமொரு வகையில் ராஜீவ் எதிர்ப்பு போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு அவசியமாக உள்ளது. எதிர்க்கட்சிகள் ஒருவேளை ஐக்கியப்பட்டு ராஜீவைத் தூக்கியெறிய முற்படும்போது, ராஜீவுக்கு மாற்று இல்லை என்று கூறி காலை வாறிவிடும் ஐந்தாம்படையாக வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் இதை நிரூபித்துக் காட்டியுள்ளனர். எனவேதான் எதிர்க் கட்சிகளிடம் ஊடுருவி சீர்குலைக்கும் தலையாய பணியை நிறைவேற்ற ராஜீவ் எதிர்ப்பு வேடம் போடுகின்றனர்.

'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே!' என்று ஆண்டவனையே துணிவாக விமர்சித்தாலும் நக்கீரன் ஒரு சிவபக்தன் தான். அவனது பக்தியை யாரும் குறைத்து மதிப்பிட்டது கிடையாது என்பது புராணக் கதை. அதே போலத்தான் நவீன நக்கீரர் நம்பூதிரிபாடும் ரஷியாவின் புதிய ஜார்கள் ராஜீவை ஆதரிப்பதை பகிரங்கமாக விமர்சித்தாலும் அவர் அடிப்படையில் ரஷ்ய அடிவருடிதான். அவரது ரஷ்ய பக்தியையும் விசுவாசத்தையும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதே உண்மை.

இப்போதுகூட என்ன சொல்கிறார் பாருங்கள்: ''உலக உழைக்கும் வர்க்க நலனுக்காக ராஜீவும் கோர்ப்பசேவும் கூட்டுச் சேருவது மிக அவசியமானது. அதே நேரத்தில் இந்திய உள்நாட்டு நிலைமைகளில் ராஜீவுக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் உழைக்கும் மக்களைத் திரட்டுவது மிக அவசியம்'' என்கிறார். ஆக, நம்பூதிரி பிராண்டு கம்யூனிசக் கொள்கைப்படி, உள்நாட்டில் ராஜீவ் பிற்போக்கு; வெளிநாட்டுக் கொள்கையில் முற்போக்கு. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு துரும்பைக்கூட போடாத, ஈழத் தமிழரைப் படுகொலை செய்யும் ஆக்கிரமிப்பாள



படிப்பகம்

னரக உலக நாடுகளிடம் மதிப்பிழந்து கிடக்கும் ராஜீவ் கும்பல் எப்படி முற்போக்கு என்பது போலிக் கம்யூனிஸ்டுகளுக்கே வெளிச்சம். இந்த லட்சணத்தில் ராஜீவின் கொள்கைகளால் பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகள் இந்தியாவில் சர்வ சாதாரணமாக மூலதனமிட்டு கொள்ளையிடுவதாக வேறு இப்போலிகள் கூப்பாடு போடுகின்றனர்.

மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் பிற்போக்கு பித்தலாட்டக்காரர்களுக்கு போலி கம்யூனிஸ்டுகளிடம் என்றுமே தனி மரியாதைதான். ஏற்கனவே பாசிச இந்திராவின் உள்நாட்டுக் கொள்கை பிற்போக்கானது; வெளிநாட்டுக் கொள்கை முற்போக்கானது என்று சித்தாந்த விளக்கமளித்தார்கள்.



கடந்த மாதம் கல்கத்தாவில் நடந்த 'அரே கிருஷ்ணா' ஊர்வலம். இந்தியாவிலுள்ள ரஷிய தூதரக அதிகாரியும் அவர் மனைவியும் இந்தக் கும்பலோடு சேர்ந்து கூத்தடித்தனர்.

நேருவை சோசலிச சிற்பியாகச் சித்தரித்தார்கள். எடுபிடிகளே இந்த அளவுக்கு படு பிற்போக்காளர்களைப் பாராட்டும்போது, எஜமானர்களான ருஷ்ய ஏகாதிபத்தியவாதிகள் பாசிச இந்திராவிலிருந்து அனைத்து மக்கள் விரோத சர்வாதிகாரிகளையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு சக்திகளாக அங்கீகரித்து ஆதரிக்கின்றனர். பிலிப்பைன்சின் முன்னாள் சர்வாதிகாரி மார்க்கோசுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெள்ளமாகப் பெருகியபோது, அமெரிக்க ஏகாதிபத்தியமே தங்கள் அடிவருடியான மார்க்கோசைக் கை விடத் துணிந்தபோது, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி என்று மார்க்கோசுக்கு மகுடம் சூட்டி தங்கள் அடிவருடியாக மாற்றத் துடித்தது ரஷிய ஏகாதிபத்தியம். ஆக, ரஷியாவுக்கு யார் ஜால்ரா போட்டாலும்—அவர்கள் எப்படிப்பட்ட சர்வாதிகாரிகளாக இருந்தாலும் பிரச்சினையில்லை—அவர்கள் முற்போக்குதான். இதுதான் ரஷிய பிராண்டு கம்யூனிசம். எனவேதான் கொலைகாரனாக, கொள்ளைக்காரனாக அம்பலப்பட்டுள்ள பாசிச ராஜீவையும் முற்போக்கு என்று ஆதரிக்கின்றனர்.

இந்த நிலைமையில் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் நம்பூதிரிபாடு நவீன நக்கீரராக அவதாரம் எடுத்திருப்பதுகூட ஆச்சரியமான விஷயமல்ல. இதே போலத்தான் செக்கோஸ்லாவிய போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவரான அலெக்சாண்டர் டுபெக்கும் ரஷியாவை விமர்சனம் செய்கிறார். "ரஷ்ய குருபீடம் சொன்னதை அப்படியே நாங்கள் ஏற்று செயல்படுத்தியதால் பல தவறுகள் நேர்ந்து விட்டன" என்று சாடுகிறார். ஆக, இன்று அதிகாரத்திலுள்ள கோர்ப்பசேவ் கும்பல், ரஷியாவின் நெருக்கடிகளுக்கு அதன் பழைய தலைவர்களே காரணம் என்று குற்றம் சாட்டி தப்பித்துக் கொள்வதைப் போலவே, உலகெங்குமுள்ள ரஷ்ய எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகளும் தமது கையாலாகாத்தனத்தை மூடி மறைக்க குருபீடத்தின் மீது விமர்சனம் செய்வதை ஒரு போக்காக கொண்டிருக்கிறார்கள்.

ஒரு புறம் விமர்சன நாடகமாடும் போலிகள், மறுபுறம் கோர்ப்பசேவின் கிளாஸ்நாஸ்ட்-பிரஸ்டோரிகா எனும் கேடுகெட்ட முதலாளித்துவக் கொள்கைகளை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகின்றனர். போலிகள்கிடக்கட்டும்; அமெரிக்க மாமா ரீகனிலிருந்து, போலிகளால் எதிர்ப்புரட்சி கும்பல் என்று முத்திரை குத்தப்பட்ட போலந்து நாட்டின் வாலேசா தலைமையிலான 'சாலிடாரிடி' தொழிற்சங்கம்கூட கோர்ப்பசேவின் புதிய கொள்கைகளை ஆதரிக்கின்றனர். ஆனாலும் இந்தக் கொள்கைகள் ரஷியாவின் சோசலிசக் கட்டுமானத்தைக் காப்பதற்கானவைஎன காதில்பூசுற்றுகிறார் நம்பூதிரிபாடு.

போலிகள், கோர்ப்பசேவின் கொள்கைகளை தலைமேல்தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடும் அதே நேரத்தில், இப்புதிய கொள்கைகளின் விளைவாக புதிய நெருக்கடிகள் தோன்றி கோர்ப்பசேவ் கும்பல் விழிபிதுங்கி நிற்கிறது. ஏறத்தாழ ஆறுமாதங்களுக்கு மேலாகத் தொடரும் அர்மீனியக் கலவரம் இன்று பற்றி எரிகிறது. கடையடைப்பும் வன்முறையுமாக தீவிரமாகிவிட்டது. மீள வழிதெரியாமல் தவிக்கும் கோர்ப்பசேவ், "ஆண்டவராகிய யேசு மட்டும்தான் எல்லாவற்றுக்கும்தீர்வுகூறமுடியும். 5 ரொட்டித் துண்டுகளைக் கொண்டு 20,000 யூதர்களுக்கு எப்படி உணவளிப்பது என்று அவர் தெரிந்திருந்தார். அந்தத் திறமை எங்களிடம் இல்லை" என்று புலம்புகிறார்.

நெருக்கடிகள் முற்றி தனிமைப்படும் போதெல்லாம் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆண்டவனிடம் முறையிடுவதுவழக்கமானதுதான். ஏற்கனவே கேரளத்தில் ராகவன் கோஷ்டி கலகம் செய்தபோது—'மார்க்சிஸ்ட்' கட்சியேபிளவுண்டபோது ஆண்டவனிடம் நல்ல புத்தியைக் கொடுக்குமாறு வேண்டினார் திருவாளர் நம்பூதிரிபாடு இப்போது, உலகெங்கும் உள்ள புரட்சிகர சக்திகள் கோர்ப்பசேவின் புதிய கொள்கைகளைக் கேலி செய்து அம்பலப்படுத்துவதைக் கண்டு மனமுடைந்து, "பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பிதாவே, தாங்கள் என்ன சொல்கிறோம் என்று புரியாத இவர்களை மன்னியும்!" என்று வேண்டிக் கொள்கிறார்.

ஐயோ பாலம்! நாடகத்தின் முதல் காட்சியிலேயே அரிதாரம் கலைந்து அம்பலப்பட்டு நிற்கும் நம்பூதிரிபாடின் நக்கீர வேடத்தைக் கண்டு புரட்சிகர சக்திகள் ஏமாறப் போவதில்லை. பாசிச ராஜீவ் கும்பலுக்கும் அதை முற்போக்கு என ஆதரிக்கும் ரசிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான போராட்டத்தை நிறுத்தப் போவதுமில்லை.

● பாலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாளையக்கார சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: ... 107-எ, ... சென்னை-600 094

www.padippakam.com





அழகுப் படுத்துவதாகக் கூறி எம்ஜிஆர்—தேவாரம் தலைமையிலான போலீசு 14 மீனவர்களை படுகொலை செய்த அதே சென்னை—மெரினா கடற்கரை. ஜூலை 23, 24 தேதிகளில் கள்ள நோட்டு—கறுப்புப்பணபண்டாரம் பங்காரு அடிகளுக்கு ஆன்மீக மாநாடு நடத்த, மக்களை மடமையில் மூழ்கடிக்கும் கூத்தடிக்க, கழிப்பறை-காலிமைதானமாக பயன்படுத்த—தாராள அனுமதியளித்தது தமிழக அரசு. விடுவாரா பண்டாரம்! மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி 'மாடலி'ல் கடற்கரையில் ஒருகோவிலை வண்ண வேலைபாடுகளிடையே நிர்மாணித்தார்.

இயற்கைவள மேம்பாட்டு ஆன்மீக மாநாடு என்ற பெயரில் மாபெரும் காங்கிரசு ஆதரவு மாநாட்டை நடத்திக் காட்டினார். உள்ளூர் அறிவுக் கொழுந்து அலெக்சாண்டர் முதல் டில்லி தர்பார் குடி அரசு உப தலைவர் சங்கர்தயாள் சர்மா, காங்கிரசுக் கட்சி கீழ்மட்டம் தங்கபாலு, மேல் மட்டம் கருப்பைய்யா (மூப்பனார்) பூட்டா சிங், 'ரேஸ்' குதிரை அதிபர் எம்.ஏ.எம் ராமசாமி வரை வந்திருந்து பங்காரு பண்டாரத்தை பாராட்டினார்கள். மரங்களை வளர்ப்பது, இயற்கை வளத்தைப் பெருக்குவது, சுற்றுச் சூழல் தூய்மையை பாதுகாப்பது என அனைவரும் சபதம் எடுத்துக் கொண்டனர்.

இதோ கண்ணுக்கு குளிர்ச்சியாக பரந்து விரிந்திருக்கும் இந்த அழகுமிகு குளமும் பூங்காவும் எந்த நேரத்திலும் அழிக்கப்பட்டு தூர்க்கப்படலாம். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு பக்கத்திலிருந்த மிருகக் காட்சி சாலைக்கு சொந்தமான இடம் இது. மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றி விட்டதால், இந்த இடத்தை பொது மக்களுக்கு பயன்படும் வகையிலும், சுற்று சூழல் தூய்மைக்கும், பூங்காவை அப்படியே பாதுகாக்க வேண்டும் என அரசை மன்றாடிக் கொண்டன பல சமூக சேவை நிறுவனங்கள்.

எம்ஜிஆர் தன்னுடைய அமெரிக்க நண்பர் பழனி பெரிய சாமிக்கு இந்த நிலத்தை தாரை வார்த்துக் கொடுக்க முடிவெடுத்தார். பிறகு வந்த காங்கிரசின் எடுபிடி கவர்னர் ஆட்சியும் அதை தடுத்து நிறுத்தவில்லை. அடுக்காக பல விதிகளை மீறி 15 ஏக்கர்பரப்பளவு உள்ள பூங்காவையும் சுமார் பத்து ஏக்கர் பரப்பளவு உள்ள குளத்தையும் முப்பது ஆண்டு குத்தகைக்கு என வெறும் 2கோடி ரூபாய்க்கு பழனி பெரிய சாமிக்கு தானம் செய்ய துணிந்து விட்டது. ஆனால் அவ்விடத்தின் சந்தை மதிப்பு 1 ஏக்கர் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய். அது மட்டுமல்ல. 'இருக்கும் நிலையிலேயே பயன்படுத்த வேண்டும்' என்ற விதியையும் மீறி, ஐந்து நட்சத்திர ஓட்டல் எழுப்ப அடிக்கல் நட்டு விட்டார் பழனி பெரிய சாமி.



கூட்டுக் கொள்ளையடிக்க, ஒருபுறம் போபால் விஷவாயு பகாசூர நிறுவனங்களுக்குதாராள அனுமதி; சொந்த நாட்டையே சுடுகாடாக்க காடுகள் அழிப்பு! மறுபுறம் மக்களை ஏய்க்க யாகம், வேள்வி! இன்னும் நாம் இக்கும்பலை எத்தனை நாள்தான் விட்டு வைப்பது? ●

படிப்பகம்